விலை ரூபா 1–25

ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 29 சித்திரை 26 றம்ழான் 10 இதழ் 79

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 9-5-1987

யாழ்.குடாநாட்டில் ராணுவத் தாக்குதலை நடத்த இலங்கை அரசு திட்டமிட்டுள்ளது

– அமைச்சர் நட்வர்சிங்

(புதுடில்லி, மே 8

யாழ்ப்பாணம்க்கு டா நாட்டில் பெரும் ராணுவத்தாக்குதலொன்றை நடாத்த இலங்கை அரசாங்கம் திட்டமிட்டுள்ளது ஆனல் அத்தகையதொரு தாக்குதல் நடத்தப்பட்டால் பெருமளவு அப்பாவித்தமிழர் உயிரிழப்பர் இலங்கையில் ஒரு போர் நடைபெறுவதை இந்தியாவிரும்பவில்லை''

இவ்வாறு இந்திய வெளியுறவுக்கான இணையமைச்சர் நட்வர்சிங் மாநிலங்களவையில் இன்று தெரிவித்தார்.

தி. மு. க. வைச்சேர்ந்த வை. கோபாலசாமியும் வேறு ஒன்பது பேரும் சபையில் தமிழர் விடயம் தொடர்பாகக் கொண்டுவந்த கவனயீர்ப்புத் தீர்மானத்திற்குப் பதிலளித்துப்பேசுகையிலேயே இணையமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

யாழ் ஆஸ்பத்திரியை மூடும்படி அரசு உத்தரவிட்டிருப்பதனல் இத்தாக்குதல் நடத்தப்படுவதற்கான வாய்ப்புகள் பெருகியிருப்பதாகவும் கூறிய அமைச்சர் இதனல் தமிழ்மக்கள் மேலும் பாதிக்கப்படுவர் எனக் கவலை தெரிவித்தார்.

(8ம் பக்கம் பார்க்க)

யாழ். ஆஸ்பத்திரியை மூடும் அரசின் முடிவு ஒத்திவைப்பு

(தொழும்பு)

யாழ். போதனவைத்தியசாலையை நேற்றுடன் மூடிவிடுவது என்ற அரசின் தீர்மானம் காலவரையறையின்றி ஒத்திப் போடப் பட்டுள்ளது.

யாழ். போதனவைத்திய சாலையை மூடிவிடுமாறு அரசு விடுத்திருந்த உத்தரவையடுத்து பேச்சுவார்த்தை நடத்துமுகமாக யாழ். அரச அதிபர் திரு. மு. பஞ்சலிங்கம் தலைமையில் கொழும்பு வந்த வைத்தியசாலை தூதுக்குழுவினர், தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலியுடன்மேற் கொண்ட பேச்சுக்களை அடுத்தே மேற்படி அரசின் முடிவு ஒத்தி வைக்கப்பட்டது.

(8ம் பக்கம் பார்கக)

இலங்கை அரசுக்குராணுவநடவடிக்கை மூலம் பதிலடி கொடுக்க வேண்டும்

(சென்னை)

"இராணுவத்தீர்வு பற்றி பேசும இலங்கை அரசுக்கு இராணுவ நடவடிக்கை மூலமே பதிலடி கொடுக்க வேண்டும்."

இவ்வாறு அண்ணு தி. மு. க. கழக உறுப்பினர் திரு. ஆலடிஅருணு நேற்று இலங்கை இனப் பிரச்னை குறித்து மாநிலங்கள் சபையில் இடம்

(8-ம் பக்கம் பார்க்க)

யாழ். போதனு வைத்தியசாலை இடமாற்றம் செய்யப்படுவதை ஆட்சேபித்து, யாழ். மாநகரசபை ஊழியர்களும், பினர்களும், பொதுஸ்தாபனங்களின் ஊழியர்களும், பொதுமக்களும் ஒன்றிணைந்து யாழ். மாநகரசபை ஆணையாளர் ஊர்வலமாகச் சென்றதைப் படத்தில் காணலாம். சனசமூகநிலைய உறுப்பினர்களும் தலைமையில் நேற்று (படங்கள்: 'தேவா')

இடமாற்றம்

"காவேரி ரெக்ஸ் சென்ரர்"

இல. 181 நவீனசந்தை. யாழ்ப்பாணம்.

எமது ஸ்தாபனம் தற்போது நிலவிவரும் சூழ்நிலை காணமாக வாடிக்கையாளரின் நன்மை கருதி தற்காலிகமாக கீழ்க்காணும் விலாசத்தில் இயங்கிவருகிறது. கலியாண பட்டு பிடவைகளும் அதற்கேற்ற பிளவுஸ்துணிகளும் மற்றும் எல்லா ரக பிடவைத்தினுசுகளும் எம்மிடம் பெற்று கொள்ளலாம்.

"காவேரி ரெக்ஸ் சென்ரர்"

இல. 15, நிக்லஸ் லேன்,

(கச்சேரி பஸ் ஸ்ராண்ட் அருகாமை)

கச்சேரி நல்லூர் றோட்,

யாழ்ப்பாணம்.

[சி 8989]

யாழ். ஆஸ்பத்திரி விவகாரம் ராஜீவ் தலையிட வேண்டும் – எம். ஜி. ஆர். வலியுறுத்து

(சென்னை)

"யாழ். பொதுமருத்துவமனையை மூடிவிடுமாறு இலங்கை அரசு உத்தரவிட்டுள்ளமையை மனிதாபிமான அடிப்படையில் ரத்துச்செய்யுமாறு ஜனுதிபதி ஜெயவர்த்தனவை பிரதமர் ராஜீவ் வலியுறுத்தவேண்டும்'' என்று தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்திக்கு அவசர வேண்டுகோள் ஒன்றை நேற்று விடுத்துள்ளார்.

முதலமைச்சர் திரு இராமச்சந்திரன் தமது வேண்டுகோளில், யாழ்ப்பாணம் மருத்துவமனையை மூடிவிடுவது என்ற இலங்கை அரசின் முதிவு மனிதருக்குள்ள அடிப்படை உரிமைகளை மீறும் செயலாகும் என்று சுட்டிக் காட்டியுள்ளார்.

மேலும் இலங்கை அரசின் மேற்படி முடிவு குறித்து தமிழ்நாடு மக்கள் பெரும் பதற்றமடைந்துள்ளார்கள் என்றும் தெரிவித்துள்ளார்.

(எ)

இலங்கை அரசின் முடிவை ஆட்சேபித்து சென்னையில் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

[சென்னை]

யாழ். போதனு வைத்திய சாலையை இடமாற்றம் செய்யுமாறு இலங்கை அரசுகிரஸ் ஆகிய கட்சிகளின் விடுத்த உத்தரவை ஆட்சேபித்து திராவிடர் கழகம், தமிழ்நாடு காமராஜ் காங் தொண்டர்கள் சென்னையில் நேற்று துணைத் தூதராலயத்திற்குமுன் பெரும் ஆர்ப்பாட்

[8-ம் பக்கம் பாக்க]

வரி விளம்பரம்

விற்பனைக்கு

அல்காக்களும் பங்கசுக்களும் ஓர் அறிமுகம (Alga and Fungi) ஆசிரியர் கலாநிதி அ. சிவபாலன் விலை ரூபா 35-00 விற்பனை பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம் (சி-8813)

எங்களிடம் எந்நேரமும் சுப முகூர்த்தங்களுக்கு உரிய பட்டு புடவைகளும் மற்றும் சகல வைபவங்களுக்கேற்ற புடவை வகைகளும் பெற்றுக்கொள்ளலாம். கணேசன் ஸ்ரோர்ஸ், இல. 11, கஸ்தூரியர் ஒழுங்கை, கஸ்தூரியர் ரோட், யாழ்ப்பாணம். ஏ-3980

பாவித்த வீட்டுப் பாவனைப் பொருட்கள் தளபாடங்கள், அல்மாரி, கட்டில் மெத்தைகள், பித்தளை சில்வர் பொருட்கள், Baby Cot, மேசைகள், பெல்ஜியம் கண்ணாடிகள், Show Case, கதிரைகள், மிகவும் மலிவு விலையில் உடன் விற்பனைக்குண்டு. M. தியாகராஜன், 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். சென்பற்றிக் சந்தியருகில். (-சி8938)

National S 1 வீடியோ மிக்ஷர், J. V. C G X N 70 E வீடியோ கமெரா, Orien Portable வீடியோ டெக், Sony அம்பிளிவயர், Floor Polisher, Electric Cooker, சிங்கர் தையல் மெசின் (எலக்ரிக்) மற்றும் பல வீட்டுப் பாவனைப் பொருட்கள் விற்பனைக்குண்டு. 45, பழம்ரோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். சி-8953

திருமண அழைப்பிதழ்களும் திருமண வாழ்த்துமடல்களும், திருமண ஆண்டு நிறைவு வாழ்த்து மடல்களும், பிறந்த நாள் வாழ்த்து மடல்களும், சகல விலைகளிலுமான முத்திரைவகைகளும், வான் கடித உறைகளும் மொத்தமாகவும் சில்லறையாகவும் நியாயமான விலைகளில் பெற்றுக்கொள்ள: அரஸ் ஜவுளியகம், 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24001. சி-8001

2-ம் வருட நினைவஞ்சலி

மனோகரன் இராசையா (பரன்)

ஆண்டவன் படைப்பு: 10-10-1963

ஆள்பவனின் பறிப்பு: 09-05-1985

கொக்காவில் போராட்டத்தில் அரக்கரின் குண்டுக்குப் பலியாகி வீர மரணமெய்திய எமது மனோகரனின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்,
பெற்றோர், சகோதரர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள்.
கரம்பொன் தெற்கு,
ஊர்காவற்றுறை
(சி 8906)

விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள A. 35 1 ஸ்ரீ 1840 கார் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- V. S Yohenderan. 11/5, Mathews Road, Jaffna. [சி-8973]

பம்பாய் வெங்காய விதை விவசாயத் திணைக்கள சிபார்சின் முறைப்படி குளிரூட்டிய நிலையில் சளஞ்சியப்படுத்தப்பட்டு விற்பனைக்கு உண்டு. குறைந்தது 3 கிலோ வாங்குவோருக்கு பம்பாய்ச் செய்கை கைநூல் இனாமாக வழங்கப்படும். விலாசம்: ஸ்ரீமகள் ரேடர்ஸ்,158,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி 8426)

கோவில் பூசைப் பொருள்கள், எவர்சில்வர், பித்தளை, அலுமெனியம்,செம்பு, வீட்டுப் பாவனைப் பாத்திரங்கள், குத்து விளக்குகள், திருவாசி,கோவில் பட்டுக் குடை, பித்தளை, அலுமெனிய வார்ப்பு வேலைகள், முலாம் பூசுதல் Plating), (வெற்மின்) கால் நடைக்கான கனி உப்புக் கலவை மற்றும் உங்கள் சகல தேவைகளுக்கும்: புதிய அகம், சிவன் மாளிகை லிமிட்டெட், மாரி அம்மன் ஒழுங்கை, திருநெல்வேலி சிவன் அம்மன் கோவிலுக்கு அண்மையில், திருநெல்வேலி, யாழ்ப்பாணம். [சி-8974]

ஆனைக்கோட்டை, மானிப்பாய்க்கு அருகாமையில் 2 பரப்புக் காணி கிணற்று பங்குடன் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- "இந்திரா வாசா", கூழாவடி, ஆனைக்கோட்டை. (ஆனைக்கோட்டை தபால் கந்தோருக்கு அருகாமை) [சி-8992]

2-ம் ஆண்டு நினைவஞ்சலி

அம்பிகாபதி நந்தகுமாரன்

ஆண்டவன் படைப்பு: 15-04-1967

ஆள்பவன் பறிப்பு: 09-05-1985

அன்பு மகனே, ஆசைச் செல்வமே ஈராண்டு ஆகி விட்டதடா நந்தா, என் கண்ணீர் வற்றவில்லை, நந்தன் என்றால் அனைத்துலகமும் கேட்குமென கனவு பல கண்டேனடா, அக்கனவெல்லாம் வீணாகி விட்டதே நந்தா பூவாய் உதிர்ந்தாலும் பொறுத்திருப்பேனடா, பிஞ்சாகி, காயாகி, கனியாகி நின்ற பருவத்திலே கவர்ந்தானே, உன் பிரிவால் துவண்டு துடிக்கும்: ஐயா, அம்மா, உறவினர்கள், பாடசாலை நண்பர்கள்.

மார்க்கட் லேன்,
உடுப்பிட்டி. (சி 8902)

பயிற்சிகள்

றேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக் குறைந்த கட்டணத்தில் கூடியநேர செய்முறையுடன் பயிற்சியளிக்கப்படுகின்றது. புதிய பிரிவு ஆரம்பம்:- 16-5-87. விபரங்கட்கு: எலக்ரோ டெக்னிக் ல் இன்ஸ்ரிரியூசன், கல்வளை, சண்டிலிப்பாய். [சி-8975]

தேவை

எமது நிறுவனத்தில் கடமையாற்றுவதற்கு பெண் எழுது வினைஞர் தேவை. தமிழ், ஆங்கிலம் கற்பிக்கக்கூடியவராகவும் இருத்தல் நன்று. விண்ணப்பிக்கவும்:- நிர்வாகி, றோயல் இன்ஸ்ரிரியூட், கே. கே. எஸ். வீதி, இணுவில். [சி-8969]

பயிற்றப்பட்ட தாதிகள் தேவை. நேரில் வரவும்: சென்றல் நேசிங் ஹோம், 350, பலாலி வீதி, திருநெல்வேலி. [சி-8977]

விவசாய உத்தியோகத்தர் தேவை. முழு விபரங்களுடன் உடன் விண்ணப்பிக்கவும். முகவரி:- செயலாளர், ஊற்று நிறுவனம், பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். [சி-8959]

திருநெல்வேலிச் சந்தைக்கு அருகாமையிலோ அல்லது சுன்னாகம் சந்தைக்கு அருகாமையிலோ புடவை வியாபாரம் செய்வதற்கு தகுந்த ஓர் இடம் உடனடியாகத் தேவை. தொடர்புகளுக்கு B. அரசன், 550/8 A, கே.கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். [தட்டாதெரு சந்திக்கு அண்மையில்) அல்லது அரஸ் ஜவுளியகம், 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம் சி-8956

2-ம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன் வல்லிபுரம் முருகையா (குரு)

ஆண்டவன் படைப்பு: 10-06-1964

ஆள்பவன் அழிப்பு: 9-05-1985

பண்பாளனாய் நல்லவனாய் பார் போற்றி வாழ்ந்த எனது மகனே! உலகத்தின் கொடியவர்கள் வாழ்கின்ற பூமியிலே கொடுமைக்கு பஞ்சமில்லை என் மகனே! இளந் தளிர் போல் வளர்ந்த உன்னை இனி எப்போ நாம் காண்போம். ஆண்டுஇரண்டாகியும் உன்நினைவால் துடிக்கிறோம். உனது ஆத்மா சாந்தி அடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம். உன் நினைவால் துடிக்கும்: தாய், தந்தை, அண்ணாமார்கள், அக்காமார்கள், தம்பிமார்கள். தங்கைமார்கள், அத்தான்மார்கள், மச்சாள்மார், அப்பு ஆச்சிமார், சித்தப்பாமார்,சித்திமார்மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்.

சமரபாடு,
எள்ளங்குளம்,
வல்வெட்டித்துறை.

தகவல்;வல்லிபுரம் குடும்பத்தினர். (சி8983)

கல்வி

ஐந்தாம் வகுப்பு [ஆறும் ஆண்டு] புலமைப்பரிசில் பெற, 35 வருடஅனுபவங் கொண்ட ஆசிரியரால் 1987-05-11 திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு வகுப்பு ஆரம்பமாகின்றது நேரில்விண்ணப்பியுங்கள்அன்பு மாலைப்பாடசாலை, 42, பிரப்பங்குளம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். சி-8961

வகுப்புக்கள்

வெளிநாடு உள்நாடுகளில் வேலைதேடி செல்பவர்க்கு ஓர்அரிய சந்தர்ப்பம் தொழில்நுட்பக் கல்வி பயிற்சியுடன் ஆரம்பமாகின்றன. சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும். தொடர்பு: Vispa Engineering Aid Hall (ஆனைப்பந்தி சந்திக்கருகாமையில்) 328, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். சி-8921

மணப்பந்தல்

வேளாள குலத்தைச்சேர்ந்த 30 வயதுடைய 6 அடி உயரமான வெளிநாட்டில் உயர் பதவி வகிக்கும் இந்துமத மணமகனுக்கு மணமகள் தேவை. மணமகனுக்கு எவ்வித தோஷமும் இல்லை. விண்ணப்பிக்கவும்:- விளம்பர இல. 8932, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். [சி-8932]

சேவை

தரமான றபர்சீல்கள்குறித்த தவணையில் செய்து தரப்படும். யாழ் நகரசபை எல்லையுள் வர்த்தகர்கள் கடித மூலம் ஆடர் அனுப்பலாம். முற்பணம் தேவையில்லை றபர்சீல்களுக்கு ஆடர் சேகரித்துக் கொடுப்பவர்களுக்குத் தகுந்த கமிசன் கொடுக்கப்படும். தொடர்புகொள்ளவும்:- சின்னத்தங்கச்சி மகன், முருகமூர்த்தி கோவிலடி, வண்ணார் பண்ணை,யாழ்ப்பாணம். [சி-8985]

1-ம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் குமாரசாமி குலேந்திரன் (குலம்)

தோற்றம்: 26-04-1968
மறைவு: 08-05-1986
திதி: 09-05-1987

அன்புச் செல்வமே நீர் தமிழீழ மீட்புக்காக உயிர்த் தியாகம் செய்து இன்றுடன் ஓராண்டுகழிந்தாலும் உனது அன்பு நிறைந்த முகத்தை எம்மால் என்றும் மறக்க முடியாது. இனி என்று உனைக் காண்போம் உன் பிரிவால் துயருற்றிருக்கும்

அன்பு அப்பா, அம்மா, சகோதரங்கள், சித்தப்பாமார், செ.குமாரசாமி, ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை. (சி 8982)

தவறிவிட்டது

இல. 585320951 V செல்வி கமலாதேவி கணபதிப்பிள்ளை, திருவாதணி, கரணவாய் வடக்கு, வல்வெட்டித்துறை என்பவருடைய அடையாள அட்டை ஆரியகுளத்தடியில் (6-5-87) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [சி-8976]

1-ம் ஆண்டு நினைவஞ்சலி

திரு க.இராசரத்தினம்
(மாவை மெற்றல் இன்டஸ்றீஸ்உரிமையாளர்)

அன்னையின் மடியில்: 26-07-1951

ஆண்டவன் அணைப்பில்: 20-04-1986

எம்மை வாழ்வித்து எமக்கு ஒளிதந்த அன்புத் தெய்வமே உங்கள் ஆத்மசாந்தி வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

அன்புமனைவி, பிள்ளைகள், தந்தை, தாய், சகோதர சகோதரிகள் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்.

கீரிமலை வீதி,
மாவிட்டபுரம்,
தெல்லிப்பழை.
(சி 8984)

2-ம் ஆண்டு நினைவஞ்சலி

திரு. கி. சிவக்கொழுந்து
("சிவா பொடிவேக்ஸ்" உரிமையாளர்)

மலர்வு: 30-08-1942
உதிர்வு: 09-05-1985

அன்பின் ஜோதியே, பாசத்தின் பிறப்பிடமே, கருணையின் பெருங்கடலே, வாரி வழங்கிய வள்ளலே,எம்மைஇமைப் பொழுதில் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட எம்அன்புத் தெய்வமே, நீங்கள் எம்மைப்பிரிந்து இன்றுடன் ஈராண்டுகள் பூர்த்தியாகிவிட்டாலும் உங்கள் அன்புமுகம் ஈராண்டுகள் என்ன ஈராயிரம் ஆண்டுகள் சென்றாலும் மறையாது. தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம். உங்கள் நினைவில்வாழும்:

மனைவி, பிள்ளைகள், உறவினர்.
"புறாப்பொறுக்கி",
கரணவாய் தெற்கு.
கரவெட்டி. (சி 8972)

தென் ஆபிரிக்க வெள்ளையர் தேர்தல் வெற்றி

கறுப்பர்களுக்கு போத்தா எச்சரிக்கை!

பிறிட்டோரியா, ஏப் - 8

தென்னபிரிக்க வெள்ளை இன ஆட்சியாளர்களின் பொதுத்தேர்தலில் தென்னபிரிக்க அதிபர் திரு. பி. டபிள்யு. போத்தாவின் ஆளுங் கட்சியான தேசியக்கட்சி பெரும் வெற்றி பெற்றுள்ளது. இந்த வெற்றியையடுத்து திரு. போத்தா நேற்று கருத்துவெளியிடுகையில் 'கறுப்பின கிளர்ச்சியாளர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்" என்று எச்சரித்துள்ளார்.

திரு. போத்தா மேலும் கருத்து வெளியிடுகையில், "தென்னபிரிக்காவில் வெள்ளையர் இன ஆட்சி உறுதியாக உள்ளதை இந்த தேர்தல் வெற்றி உணர்த்துகின்றது தென்னபிரிக்க அரசை கண்டனம்செய்யும் வெளிநாட்டுச் சக்திகளுக்கு இத்தேர்தல் வெற்றி ஒரு நல்லபடிப்பினையாகும்" எனறார்.

பெரும்பான்மை கறுப்பினத்தவர்கள் குறித்த விடயங்களில் பல சீர்திருத்தங்களை தமதுஅரசு கொண்டுவரும் எனவும், கறுப்பினத்தவர்கள் தமது வன்முறைகளைக் கைவிடாதவிடத்து சீர்திருத்தங்கள் சாத்தியப்படமாட்டாது எனவும் குறிப்பிட்டார்.

அவர் மேலும், கறுப்பினத்தவர்கள் வெள்ளை இன ஆட்சியாளர்களின் கொள்கைகளை எதிர்க்குபட்சத்தில் அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரித்தார்.

'ஆபிரிக்க தேசிய காங்கிரஸ்' ஆட்சியின் தலைவரான ஒலிவர் தம்போ: "தீவிரவாதத்தை அதிகரித்து ஆயுதப்போராட்டத்தை ஊக்குவிச்கவேண்டிய நிலையை இத்தேர்தல் உருவாக்கியுள்ளது" என்று இத் தேர்தல்குறித்து கருத்து வெளியிடுகையில் குறிப்பிட்டார்.

அமெரிக்க அரசு தென்னபிரிக்க தேர்தல் வெற்றிகுறித்து கருத்துவெளியிடுகையில் பெரும்பான்மை கறுப்பினத்தவரின் அரசியல் பொருளாதாரத் துறைகளில் விடுதலை கிடைக்காதவரை தென்னபிரிக்காவில் சுபிட்சம் ஏற்படாதுஎனத் தெரிவித்துள்ளது

நவீன ஏவுகணை தயாரிப்பில் இந்தியா முன்னேற்றம்!

புதுடில்லி, மே 8

இந்திய பாதுகாப்புத்துறை நிபுணர்கள் பல நவீன ஏவுகணைகளைத் தயாரிப்பதில் முன்னேற்றம் கண்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய 'பாதுகாப்புத்துறை ஆராய்ச்சி மற்றும் தயாரிப்புக்கான நிலைய' அதிகாரிகள் தகவல் தருகையில் இந்திய நிபுணர்களினால் வடிவமைக்கப்பட்ட 3 வகை ஏவுகணைகள் தயாரிப்புநிலையை அடைந்திருப்பதாகக் கூறினர். தரையிலிருந்து தரைக்கு ஏவக்கூடிய ஏவுகணையொன்றை அடுத்தமாதமளவில் தங்கள் நிலையம் பரிசீலிக்கவுள்ளதாக அவர்கள்செய்தியாளர்களிடம் தெரிவித்தனர். சுமார் 100 மைல் சென்று தாக்கக்கூடிய இந்த ஏவுகணை ஒரு தொன் 2240 ருத்தல்) நிறையுடைய வெடிமருந்தை ஏற்றிச்செல்ல வல்லது. அத்துடன்ஒரேநேரத்தில் பல இலக்குகளைத் தாக்கக்கூடியதாக நடுத்தர ரக ஏவுகணையொன்றையும் இந்தியா விரைவில் பரிசோதிக்கவுள்ளது.

இதேவேளை அதிநவீன டாங்கி எதிர்ப்பு ஏவுகணை யொன்றையும் அடுத்தவருடமளவில் இந்தியா பரிசோதிக்கவுள்ளது. சுமார் 4 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள ராணுவ டாங்கிகளையும் இந்த ஏவுகணை தாக்கும் சக்திவாய்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மாதம் தரையில் இருந்து வானுக்கு ஏவப்படும் ஏவுகணையொன்றை (சாம்) இந்தியா பரீட்சார்த்தமாக ஏவி வெற்றி பெற்றது தெரிந்ததே. (ஊ)

பிரபல அமெரிக்க

ஜனதிபதிதேர்தல்வேட்பாளர் செல்வாக்கில் சரிவு!

வாஷிங்டன், மே 8

அடுத்த ஆண்டு இடம்பெறவுள்ள அமெரிக்க ஜனதிபதித் தேர்தலில் ஜனநாயகக்கட்சி வேட்பாளராகப் போட்டியிடக்கூடியவர் எனப்தெரிதும் எதிர்பார்க்கப்பட்ட திரு.கெரி ஹார்ட்டின் அரசியல் எதிர்காலம் நிச்சயமற்றதாகியுள்ளது.

திரு. கெரிஹார்ட் கடந்த ஜனதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் பதவிக்கு போட்டியிட்டு பிரபலமாகியிருந்தார். இவரது அரசியல் பிரசாரம் நன்கு கவனகட்டியிருந்தது.

1988ம் ஆண்டு தேர்தலில் இவர் ஜனதபதியாகக்கூடத் தெரிவாகலாம் என அரசியல் வட்டாரங்களில் விமர்சிக்கப்பட்டது.

ஆனால் தற்போது வரது தனிப்பட்ட வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள பாலியல் பிரச்னை ஒன்று இவரது அரசியல் எதிர்காலத்தைப் பாதித்துள்ளது.

திரு. ஹார்ட் அடுத்தாண்டுக்கான தமது ஜனதிபதித் தேர்தல் பிரசாரத்த இரு மாதங்களுக்கு முன்னர் ஆரம்பித்திருந்தார்

கடந்த வருடம் இவர் தமது பிரசார சுற்றுப்பயணமொன்றின்போது இளம் நடிகை ஒருவருடன் பாலியல்உறவைக் கொண்டிருர்தார் எனக் குற்றம்சாட்டப்பட்டது. இதனை நிரூபிக்கும் ஆதாரங்களும் வெளியிடப்பட்டன.

ஆனால் திரு. ஹார்ட் இதனை மறுத்துள்ளார். அவரது மனைவியும் இக் குற்றச்சாட்டை மறுத்து அவர் தமது குடும்பத்துடனேயே சுற்றுப் பயணங்களின்போது உடன் இருந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இருந்தபோதிலும் இவர் மீது காணப்பட்ட தேர்தல் செல்வாக்கில் பெரும் சரிவு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

ஜனநாயகக்கட்சிக்காரர்கள் வேறொருவரை வேட்பாளர் போட்டிக்கு அமர்த்துவது குறித்து ஆலோசிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது,

கிராம நீதிமன்றில்——

பிரிந்துவாழ்ந்த தம்பதியை தனிக்குடித்தனம் நடத்த தீர்ப்பு

(பண்டத்தரிப்பு நிருபர்)

காதலித்து திருமணம்செய்து ஆறுமாத கர்ப்பிணியான காதலி தாம் பிரிந்துவாழவிரும்புவதாகவும், தமக்கு காதலிடமிருந்து தாபரிப்பு பணம் பெற்றுத்தருமாறும் கோரி வடலியடைப்பு தமிழீழ கிராம நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

இது பற்றி இருபகுதியினரையும் அழைத்து விசாரணை நடாத்திய கிராம நீதிமன்று காதலி கர்ப்பிணியாக இருப்பதால் இருவரையும் ஒன்றாக தனிக்குடித்தனம் நடாத்துமாறும், திருமணப்பதிவு செய்யுமாறும் தீர்ப்புவழங்கி திருமணப்பதிவையும் நீதிமன்றே முன்னின்றுநடாத்திவைத்தது

இருவரும்தாங்கள் ஒற்றுமையாகவும், சந்தோஷமாகவும் வாழ்ந்துவருவதாக வாரம் தோறும் நீதிமன்றிற்கு வந்து கையொப்பமிட்டுச் செல்ல வேண்டுமென்றும் என்றும் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

ஆஸ்பத்திரிக்கு அன்பளிப்பு

(பண்டத்தரிப்பு நிருபர்)

சங்கானை அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச்சபையினர் விடுத்த வேண்டுகோளை அடுத்து சங்கானை ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த திரு. ஆறுமுகம் சிவசோதி சங்கானை அரசினர் வைத்திய சாலைக்கு மின்சார அடுப்பு ஒன்றை அன்பளிப்பு செய்துள்ளார் இவ்வைத்தியசாலையில் நிலவும் மருந்து ஏழுதும் பத்திரங்களுக்கான தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்காக சங்கானை நவீன சந்தையிலுள்ள 'மெடிபிளஸ்' என்ற ஸ்தாபனத்தினர் பத்தாயிரம் பத்திரங்களை தமது சொந்த செலவில் அச்சிட்டு அன்பளிப்பு செய்துள்ளனர்.

இவர்களுக்கு வைத்திய சாலை பொறுப்பதிகாரியும் அபிவிருத்திசபை தலைவருமான டாக்டர் (திருமதி) ஊ. விக்கினேஸ்வரராஜா நன்றியும் பாராட்டும் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில்' எய்ட்ஸ்' மரணம் 20 ஆயிரம்!

வாஷிங்டன், ஏப் 8

அமெரிக்காவில் இதுவரை 20 ஆயிரம்பேர் 'எய்ட்ஸ்' நோயினால் இறந்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

38 ஆயிரத்துக்கும் அதிகமானோர் இந்தநோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர். கடந்த இரு வாரங்களில் மட்டும் 431 புதிய 'எய்ட்ஸ்' நோயாளிகள் அமெரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

எய்ட்ஸ் நோயினால் பீடிக்கப்பட்டு வருவோர்வீதம் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

அமெரிக்கர்கள் இந்த நோய்த் தடுப்புக்கான பிரச்சாரங்களில் தீவிரமாக இறங்கியுள்ளனர். இருந்தபோதினும், இதனால் பாதிப்படைவோர் தொகை அதிகரித்துக் கொண்டே செல்கின்றது.

இந்த ஆண்டில் மட்டும் சுமார் 6 ஆயிரம் புதிய எய்ட்ஸ் நோயாளிகள் அமெரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

தோட்ட நிர்வாகியின் வீட்டுக்குள் புகுந்த

தொழிலாளர்கள் உடைமைகளை சேதப்படுத்தி எரித்தனர்

நுவரெலியா, வெள்ளி

இராகலை சூரியகாந்திதோட்டத்திலிருந்து இந்தியா செல்லவிருக்கும் தோட்டத் தொழிலாளர்களுக்கு தோட்ட நிர்வாகம் கடந்த இரு மாத காலமாக வேலை வழங்கவில்லை.

தோட்டம் நஷ்டத்தில் இயங்குவதாக கூறியே இவர்களுக்கு வேலை வழங்கப்படவில்லையாம்.

இதனால் ஆத்திரம்கொண்ட தோட்டத் தொழிலாளர்கள் கடந்த சில தினங்களுக்கு முன் ஒருநாள் இரவு முகமூடியணிந்து, தோட்ட நிர்வாகியின் வீடுதிக்குள் பிரவேசித்து அவரது உடைமைகளைச் சேதப்படுத்தியதுடன் தீவைத்து எரித்துமுள்ளனர் இக் கோஷ்டியில் சுமார் 50 பேர் வரை பங்குபற்றினரென தெரியவருகிறது.

இச்சம்பவத்தையடுத்து இராணுவத்தினரும் பொலிஸாரும் சம்பவ இடத்திற்கு அழைக்கப்பட்டனர். எனினும் இதுவரை, எவரும் கைது செய்யப்படவில்லை. தற்போது நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

ஏமாற்றியவர் பிடிபட்டார்

பலாலி, வெள்ளி

அச்சுவேலி பகுதி இறைச்சிகடையொன்றில் மாட்டு இறைச்சியை மரை இறைச்சியென கூறி விற்பனைசெய்த கடைக்காரர் அப்பகுதி தமிழ் ஈழ விடுதலைப்புலிகளின் மருத்துவக்குழுவினால் கண்டுபிடிக்கப்பட்டு கடுமையாக எச்சரிக்கைசெய்ப்பட்டதுடன் தண்டனை விதிக்கப்பட்டுள்ளார்.

தொழிலாளியைத் தாக்கிய ஹோட்டல் உரிமையாளருக்கு கசையடியும் அபராதமும்

யாழ்ப்பாணம், சனி

நகரசுத்தித் தொழிலாளி ஒருவரைக் கடுமையாகத் தாக்கிய ஹோட்டல் உரிமையாளர் ஒருவருக்கு தலிழீழ விடுதலைப் புலிகள் கசையடி வழங்கியதுடன் 2000ரூபா அபராதம் விதித்தனர். தாக்குதலுக்குள்ளான நகரசுத்தித் தொழிலாளிக்கு வைத்திய செலவாக ஒரு தொகைப் பணமும் வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ். நகரிலுள்ள ஹோட்டல் ஒன்றின் உரிமையாளருக்கே மேற்குறிப்பிட்ட தண்டனை வழங்கப்பட்டதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் மூஸ்லிம் விவகாரப் பொறுப்பாளர் தெரிவித்தார்.

குறிப்பிட்ட ஹோட்டல் முன்பாகவுள்ள சாக்கடை வாய்க்காலை நகரசுத்தித் தொழிலாளி ஒருவர் சுத்தம் செய்து கொண்டிருந்தார் என்றும் அப்பொழுது ஹோட்டல் உரிமையாளர் தொழிலாளியை நோக்கி 'சுத்தம் செய்வதற்கு ஏன் இவ்வளவு நேரம் தாமதமானது?' என்று கூறி துடைப்பந்தடியாலும் மட்டப் பலகையாலும் கடுமையாகத் தாக்கினார்

(6-ம் பக்கம் பார்க்க)



(ஏ 3861)

மணிவாக்கு

தமிழர் ஆற்றல் தமிழ் முன்னேற்றத்திற்கே செல வழிய வேண்டும். தமிழை ஆங்கிலத்துக்குச் சமமான உலகமொழி ஆக்கவேண்டும்.

—சுத்தானந்தபாரதியார்

நமது நோக்கு

நிதானம் நிலவட்டும்

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி, அதாவது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை நிரந்தரமாகவே மூடப்பட்டு விடுமா? அல்லது முன்போலவே தொடர்ந்து இயங்கவிடப்படுமா?

இன்று அல்லது இன்னும் ஓரிரு தினங்களில் இதற்கு முடிவு தெரியலாம்.

இவ்வைத்திய சாலையை மூடிவிடும்படி அரசுவிடுத்த உத்தரவையடுத்து தமிழ்ப் பிரதேசமக்கள் அனைவருமே, கொதித்தெழுந்து ஆக்ரோஷத்துடன் எதிர்ப்புக்களை தெரிவித்து வருகிறார்கள். அரசஊழியர்கள், தனியார் நிறுவனங்கள், பொதுமக்கள், மாணவர்கள் எனசகலதரப்பினரும் ஸ்தாபனரீதியாகவும், தனிப்பட்ட முறையிலும்ஆட்சேபனைகள் தெரிவித்து வருகிறார்கள். ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்களை நடத்தி கண்டன அறிக்கைகளை வெளியிடுகிறார்கள்.

இது பற்றி அரசினர்க்கு எடுத்துக்கூறவும், அவர்களுடன் ஆலோசனைகள் நடத்தவும், அரசஅதிபர் தலைமையில் பிரமுகர்கள் குழுவொன்று கொழும்புக்குச் சென்றுள்ளது. இவர்கள் அங்கு நடத்திய பேச்சுக்களின் உடனடி பலனாக ஆஸ்பத்திரி மூடுவிழாவுக்கு சற்று அவகாசம் கிடைத்திருக்கின்றது. நேற்று உன் மூடப்படவிருந்த ஆஸ்பத்திரி மறுஅறிவித்தல் கிடைக்கும்வரை முன்போல் இயங்கலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இது ஒரு நல்ல அறிகுறியென்றே கருதவேண்டும்.

ஆஸ்பத்திரிய மூடுவதனால் ராணுவ நோக்கில் ஒருவேளை அரசுக்கு நன்மை கிடைக்கலாம். அதுவும் இரண்டாம்பட்சமே! ஏனெனில், கோட்டையிலிருந்து வெளியில்வருவதற்கே முடியாதிருக்கும் ராணுவம், நகரின் மத்தியிலுள்ள ஆஸ்பத்திரிக்கு நகாவது அவவளவு சுலபமல்ல. முடியாத விடத்து ஆஸ்பத்திரியை நோக்கி ஷெல் அடிப்பது பீரங்கி அடிப்பதும், மட்டுமன்றி ஆகாயத்திலிருந்து குண்டுகளைப் போட்டும் தகர்க்கலாம். நோயாளிகள் அப்புறப்படுத்தப்படாமலும், நுட்பமான மருத்துவக் கருவிகள் அகற்றப்படாமலும் இருக்கும் நிலையில் மேற்படி தாக்குதல் நடக்குமானால் இந்த அரசின் ஈனஇரக்கமற்ற, இனவிரோத, நாகரிகமற்ற செயல்பாடுகளை மீண்டும் உலகமக்கள் முன் படம்பிடித்துக் காட்டுவதாய் இருக்கும்.

எனவே, அரச அதிபரும் ஆஸ்பத்திரி உயர்அதிகாரிகளும் முன்வைக்கும் கருத்துக்களை ஏற்று ஆஸ்பத்திரியை மூடும் நோக்கத்தைக் கைவிடவேண்டும்.

யாழ். ஆஸ்பத்திரியை மூடுவதானது இப்பிரதேச மக்களின் உயிர்நிலையில் கைவைப்பது போலாகும், என சில தினங்களுக்கு முன் இப்பத்திகளில் சுட்டிக் காட்டியிருந்ததை வாசகர்கள் மறந்திருக்கமாட்டார்கள். இப்பிரதேசம் முழுவதுமே இப்பொழுது உணர்ச்சிபெற்று எழுந்திருப்பதைக் காண்பவர்கள் எமது கூற்றின் உண்மையைப் புரிந்துகொள்வர். அதுமட்டுமல்ல, ஆஸ்பத்திரி மூடப்படும் என்ற அச்சத்தில் நகரில் பல தலைமுறைகளாகக் குடியிருந்த அநேகர் பாதுகாப்பான இடங்களுக்கு நகர்ந்துவிட்டார்கள் வியாபாரஸ்தாபனங்களும் வேறு முக்கிய ஸ்தாபனங்கள்யாவும் இடம் மாறுவதற்காக சாமான்களை ஏற்றிக்கொண்டிருக்கிறார்கள். அடுத்த சிலநாட்களில் யாழ்ப்பாணம் சூன்யப்பிரதேசமாகிவிடலாம்.

சொழும்பில் நடந்த குண்டு வெடிப்பையடுத்து தமிழ்ப்பிரதேசம் முழுவதிலும்ம நடத்தப்பட்ட ஆகாயத் தாக்குதல்களும், ஏனைய நடவடிக்கைகளும் அரசின் இனக் குரோத மனப்பான்மையை உலகுக்கு நன்கு எடுத்துக்காட்டிவிட்டன. சிங்கள மக்களின் சினம் தணிக்கப்படுவதற்காக தமிழ் அப்பாவி மக்கள் கொன்குவிக்கப்பட்ட அநீதியை உலகம் வியந்து நோக்கிக் கொண்டிருக்கின்றது.

இதேமூச்சில், யாரோ செய்துவிட்ட அந்த துர்பாக்கிய சம்பவத்துக்காக யாழ்ப்பாண பிரதேச மக்கள் அனைவரையுமே பழிதீர்க்கும் வகையில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியையும் மூடிவிட எத்தனிப்பதானது எந்த விதத்திலும் அரசுக்கு நன்மையை ஏற்படுத்தமாட்டாது.

தற்காலிகமாக நன்மை ஏதும் ஏற்பட்டாலும்கூட தமிழ்மக்களுக்கெதிராக இவ்வரசு எடுத்த நடவடிக்கைகளில் கொடூரமான தொன்முகவே வரலாற்றில் இது குறிக்கப்பெறும்.

எனவே இந்தக் கடைசி நிமிடத்திலாகுதல் அரசதரப்பில் நிதானம் நிலவும் என்று எதிர்பார்க்கின்றோம். கொழும்பு சென்ற பிரமுகர்கள் வெற்றியுடன் திரும்பவேண்டும் என்பதே எமது பிரார்த்தனை.

மணவாளக்கோல சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், சனி

கோப்பாய் தெற்கு பழைய வீதி அருள்மிகு தனிப்பனை வீரபத்திரசுவாமி தேவஸ்தானத்தில் 1008 சங்காபிஷேகம் நாளை ஞாயிறு இடம் பெறவுள்ளது. இத் தேவஸ்தானத்தின் கும்பாபிஷேக தினத்தை முன்னிட்டு நடை பெறும் இம் மணவாளக்கோல விழாவில் விசேட உற்சவமும் பிரார்த்தனை வழிபாடும் இடம்பெறுகின்றன. [அ]

இந்தியத் தலையீடு அன்றும் இன்றும்

இந்தியாவின் தலையீடு இக்காமலிருந்தால் இலங்கை இனப்பிரச்னை இன்றைய நிலையை அடைந்திருக்காது என மேற்கு ஜெர்மன் பத்திரிகைபொன்று கருத்து வெளிபிட்டிருக்கின்றதாம்.

இதுபற்றி 'டெய்லி நியூஸ்' பத்திரிகை அண்மையில் மிகுந்த உற்சாகத்தோடு தலையங்கமும் தீட்டியிருச்கின்றது.

இலங்கை விவகாரங்களில் இந்தியத் தலையீடு என்பது இன்று நேற்று ஏற்பட்ட நிலைமையல்ல. சரித்திர காலத்துக்கு முன்பிருந்தே இருந்துவரும் ஒரு நிலைமை இது.

ஒருவேளை, இந்தியத் துணைக்கண்டமே இல்லாதிருந்தால் இலங்கை விவகாரங்களில் அதன் பாதிப்பு இல்லாமலிருக்கலாம். அதுவும்கூட பொருந்தாது. ஏனெனில் இலங்கையும் இந்தியத் துணைக்கண்டத்தின்ஒருபகுதி தானே!

அதன்படி பார்த்தால் இந்தியா இல்லையென்றால் இலங்கையும் இல்லையென்றுதான் பொருள்படும்.

இந்தியப் பெருநிலத்தினின்றும் இலங்கை ஒரு 28மைல் தூர நீர்ப்பரப்பினால் பிரிக்கப்பட்டிருப்பதனால்தான் இவ்வளவு பிரச்னையும். அந்த நீர்ப்பாப்பு இல்லாமலிருப்பின் இன்றைய பிரச்னை மட்டுமல்ல வேறுபலபிரச்னைகளை இலங்கை எதிர்நோக்காமலிருந்திருக்கும்.

இலங்கையின், நாகரிகம், மொழி, சமயம் மற்றும் கலை கலாசாரங்கள் எல்லாமே இந்தியாவின் நன்கொடைகள். இத்துறைகளில் அந்தப் பெரிய நாட்டில் ஏற்படும் மாற்றங்கள், மறுமலர்ச்சிகள் அனைத்துமே இந்த நாட்டிலும் உடனடியாக இல்லாவிடினும் காலம் தாழ்த்தியாகுதல் பிரதிபலித்தே இருக்கின்றன. பிரிட்டிஷ் ஆகாசக்தியை எதிர்த்து இந்திய மக்கள் நடத்திய தியாகப் போராட்டத்தின் விளைவினாலேயே இலங்கை போன்ற நாடுகளுக்கும் சுதந்திரம் வழங்கும் எண்ணம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கு ஏற்பட்டது. இந்தியா சுதந்திர மடையாதிருப்பின் இலங்கையின் நிலை என்னவாய் இருந்திருக்கும்?

எனவே நல்லதோ கெட்டதோ இந்தியாவில் ஏற்படும் மாற்றங்கள் இலங்கையில் பிரதிபலிக்கவே செய்யும். அதேபோல், இலங்கையில் உருவாகும் அரசியல் மற்றும் தேசிய மாற்றங்கள் இந்திய உபகண்டத்திலும் பிரதிபலிக்கவே செய்கின்றன.

இந்நிலையில் இந்தியத் தலையீடு என்று உரைப்பதில் அர்த்தமில்லை. இங்கு உருவாகும் தேசிய மாற்றங்கள் அல்லது கொந்தளிப்புகளினால் பாரதநாட்டில் பிரதிபலிப்புகள் ஏற்படுவது ஒருபுறமிருக்க, அதையொட்டிய எதிர் விளைவுகளும் உருவாகவே செய்கின்றன.

இந்நிலை இலங்கைக்கு மாத்திரமல்ல இந்திய உபகண்டத்திலுள்ள ஏனைய நாடுகளுக்கும் உரியநிலைமையே.

எதுவானலும், இப்போதைய இலங்கைப் பிரச்னையில் இந்தியாவின் தலையீடு தவிர்க்கமுடியாத நிலைமைகளால் உருவானதொன்று. அதை இலங்கை அரசும், வரவேற்றது இலங்கைத் தமிழர்களும் வரவேற்றூர்கள். ஆயிரக்கணக்காக இலங்கைத் தமிழர்கள் இந்திய பெருநிலத்தை நோக்கி ஓடிய பொழுதும் அந்த மக்களுக்காக அவசியமான வசதிகளை இந்தியா ஏற்படுத்திக் கொடுத்தபோதும், இந்தியாவின் தலையீடு பற்றி எவரும் குறைபட்டுக்கொள்ளவில்லை.

நிலைமைகளை, ஆறவிட்டு சகல விதத்திலும் தன்னை தயார்செய்து கொண்டதின் பின் இந்தியாவின் தலையீடு பற்றி பிரதற்றுவதில் அர்த்தமில்லை. இன்றே நாளையோ இலங்கை இனப்பிரச்னை ஒரு முடிவுக்கு வரும்போது இந்தியாவின் பங்களிப்பு (அதாவது தலையீடு) மிக முக்கியமாகவே கருதப்படும் இந்தியாவின் தலையீடு இன்றி இப்பிரச்னை தீர்க்கப்படலாம் என்று எவரும் நினைப்பதாயின் அதுவெறும் கனவென்றுதான் கூறவேண்டும்.

இவர்களுக்கு மகிழ்ச்சி

பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்குமிடையில் பூசல்கள் தலைதூக்கி விரிவடைவதை இங்குள்ளவர்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றார்கள். கொழும்புப் பத்திரிகைகள்அம்மாதிரி விடயங்களுக்கு முக்கிய இடம்கொடுப்பது மட்டுமல்ல 'இந்தியா தாக்குப் பிடிக்குமா' என்றவாறு ஊகங்களையும் கிளப்புகிறார்கள். இந்தியாவுக்கு நல்லாக ஒரு அடி விழாதா என்பதுபோல் ஏக்கம் தொனிக்கின்றது, அந்தப் பத்திரிகைகளில்.

தமிழர்களை அடித்து அமத்துப் பழகியவர்கள், இந்தியாவுக்கும் ஒரு அடி அடித்துப்பார்க்க ஆசை எழுவது இயற்கை. இப்பொழுது அடிவாங்கியவர்கள் திருப்பி அடிக்க ஆரம்பித்து விட்டதாலும், அவர்களுக்காக இந்தியா குரல்கொடுப்பதாலும் இந்த நிலைமை.

பாகிஸ்தான் அணுகுண்டு செய்கின்றதாம். அதில் ஒன்று தங்களுக்கும் கிடைக்கவிருப்பதுபோல் இங்குள்ளஅரசியல் வாதிகள் நடந்துகொள்கிறார்கள்.

அண்மையில் அங்கு விஜயம் செய்துவிட்டு திரும்பியுள்ள பிரதமந்திரி பிரேமதாசா இந்தியாவுக்கு எதிராக வெளிபிடும் கருத்துக்களைப் பார்த்தால் பாகிஸ்தான் பெரிதாகவே நம்பிக்கையூட்டியிருக்க வேண்டும்போல் தெரிகின்றது

பாகிஸ்தான் அணுவல்லரசாக மாறுவது இந்தப் பிரதேசம்முழுமைக்குமேஆபத்து அண்டைநாட்டுப் பிரச்னைகளை பேச்சுவார்த்தைமூலம் தீர்த்துக்கொள்ளும்படி உபதேசம் புரியும் அமெரிக்காவே பாகிஸ்தானுக்கு அணு உற்பத்திக்கான உதவிகளைப் புரிகின்றது. அதன் அணு ஆயுத உற்பத்தி முயற்சிகள்பற்றி அலட்சியமாக இருக்கின்றது.

இதற்குப் பதிலடியாக இந்தியாவும் அணுக்குண்டை உற்பத்திசெய்ய ஆலோசிப்பதாக அறிவித்துள்ளது.

நிலைமைகள் போகிற வேகத்தைப் பார்க்கையில் இன்னும் சில ஆண்டுகளில் பாகிஸ்தானும் இந்தியாவும் அணுவல்லரசுகளாக மாறிவிடக்கூடும். இதன் பிரதிபலிப்பு எப்படி இருக்கும்? இலங்கை அந்த ஆபத்திலிருந்து தப்பிக்கொள்ளவாய்ப்பிருக்குமா? உபகண்டத்தில் ஏற்படும் விளைவுகள் இலங்கையை விட்டுவைக்கப் போவதில்லை.

தெற்கில் மீண்டும் கிளர்ச்சிக்கு ஆயத்தம்

அண்மையில் கண்டியிலிருந்து சில மைல் தொலைவிலுள்ள பல்லேகம என்ற இடத்தில் தீவிரவாதிகள் ராணுவ முகாமைத்தாக்கி ஆயுத அபகரிப்புச் செய்த சம்பவம் அரசுக்கு மிகுந்த யோசனையைக் கொடுத்திருக்கவேண்டும்.

வடக்கு, கிழக்கில்தான் தீவிரவாதிகள். பொலிஸ் நிலையங்கள்மீதும், ராணுவ நிலையங்கள்மீதும் தாக்குதல்நடத்தி ஆயுதங்களை அபகரிப்பதில் அக்கறைகாட்டி வருகிறார்கள் என்று தென்பகுதிபற்றி அசமந்தமாக இருந்து வந்த அதிகாரிகளுக்கு இந்தச் சம்பவம் அதிர்ச்சியையே அளித்திருக்கும்.

சாதாரணமான ஒரு சம்பவம் என்றால்அதற்கும்வடக்கு, கிழக்கு தமிழ் போராளிகள் இயக்கங்களுக்கும் முடிச்சுப் போட்டு பிரசாரம்செய்து சிங்களப் பொதுமக்களின் கவனத்தை வேறுவிதமாகத் திருப்பிவிடலாம். ஆனால் இச்சம்பவம் அவ்வளவு அலட்சியப் படுத்திவிடக்கூடியது அல்ல.

தென்பகுதியில் சிங்களத் தீவிரவாத இயக்கங்கள் தம்மை ஸ்திரப்படுத்திக் கொள்வதற்கானமுயற்சிகளில் ஈடுபட ஆரம்பித்திருக்கிறார்கள் என்பதை இச்சம்பவம் காட்டுவதாக அரசு கருதுகின்றது.

மேற்படி இராணுவ முகாமுக்குள் ராணுவ உடையில் புகுந்த தீவிரவாதிகள் அங்கிருந்த அரண் காவலர்களை மடக்கி 13 'T56' இரகதானியங்கித் துப்பாக்கிகளையும், 7 ஸ்டேர்லிங் சப் மெஷின் துப்பாக்கிகளையும் அபகரித்துச் சென்றுள்ளனர். இச்சம்பவத்தையடுத்து சில மணிநேரத்தில் கண்டி பொலிசார் மகா

(5-ம் பக்கம் பார்க்க)

மக்கள் கருத்து

இடத்தை மாற்றுக

பல்கலைக் கழகங்களில் 1987 இல் அனுமதி பெறுவதற்கு தகுதிபெற்றவர்களுக்கான விசேட ஆங்கில வகுப்புகள் மே மாதம் 5ம் திகதி நடைபெறுமென அறிவிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் யாழ்ப்பாணத்திலுள்ள பிள்ளைகளுக்கு இந்த வகுப்புகள் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்திலும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணப் பிரதேசக் கல்வி பணிப்பாளர் சகல யாழ்ப்பாணவாசிகளுக்கும் வண்ணை வைதீஸ்வர வித்தியாலயம் தற்போதுள்ள சூழ்நிலையில் பாதுகாப்புக் குறைந்ததொரு பாடசாலையாக உள்ளது என்பதை அறிவார். யாழ்ப்பாணம் கோட்டை இராணுவ முகாமிலிருந்து ஏவப்படும் குண்டுகள் இந்தப் பாடசாலையைத்தாக்கும் நிலையிலுள்ளது. இங்கே விசேட வகுப்புகளுக்குச் செல்லும் மாணவர்களுக்கு அபாயம்நேரும் சாத்தியக்கூறுகள் உண்டு. இதற்குப் பதிலாக யாழ். கனரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் அல்லது கொக்குவில் இந்துக் கல்லூரி அல்லது யாழ்ப்பாணம் கோட்டை இராணுவ முகாமிற்கு அண்மையில் அல்லாத எந்தக் கல்லூரிக்கோ இந்த விசேட வகுப்புக்களை மாற்றுதல் விரும்பத்தக்கது.

டாக்டர் வேலுப்பிள்ளை யோகநாதன்,
யாழ்ப்பாணம்.

வருடாந்த உற்சவம்

யாழ்ப்பாணம், சனி. திரு நெல்வேலி சிவன் கோயிலின் வருடாந்த உற்சவம் இன்று காலை 10-30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 18 நாட்கள் நடைபெறும்.

மங்களம் பொங்கும் மணவிழா அழைப்பு

அன்புடையீர்!

அச்சுவேலி பத்தைமேனிப் பதியில் அருளுறவகியும் சிவன்சேய் சங்கிலிவயிரவர் சந்நிதி ஒளிதன்னில் ஈராயிரத்துப் பதினேழாக சீராய் வளரும் வள்ளுவ ராண்டில்

சேரும் சித்திரைத் திங்கள் ஞாயிற்றுக்கிழமை (10-5-87)

இருபத்தேழாம் திகதி முற்பகல் 10-50 முதல் 12-40வரை

தங்கி நின்றிடும் கடக லக்கின சுபநல் வேளையில்

எங்கள் மைந்தன்
சீர்பெறும் செல்வன்
பாலகுருநாதன்
(பாதுகாப்பு அலுவலர்)
சீமெந்து தொழிற்சாலை
கே. கே. எஸ்.

பத்தைமேனிப் பதிவாழ்
சின்னத்துரை மகள்
சீரிளஞ் செல்வி
ஸ்ரீரஞ்சினிதேவி

இருவருக்கும்

கற்றவர் நல்லோர் களியறம் வல்லோர்
உற்றவர் ஊரோர் நண்பர்கள் பல்லோர்
சுற்றிநின் ரூர்ப்பச் சிந்தையிற் களிப் புடன்
பற்றுவர் செங்கரம்! நற்றவம் தங்க!
தண்சுக வெல்லறம் காணு தம்பதியரை
பன்மலர் தூவி நல் வாழ்த்துரைக்க
அன்புடையோரே அழைக்கிறோம் வருக

11-5-87 திங்கள் மாலை 5 மணிமுதல் 7 மணி வரை மணமகன் இல்லத்தில் மாண்புற நிகழும் வர வேற்பதற்கும் வருகை தந்திடுக.

(இரு வீட்டார் அழைப்பும்)
உரிமையும் கேண்மையுமே சிறக்க
உங்கள் வருகையை வேட்கும்

வைத்திய கலாநிதி
கோ. சின்னத்தம்பி,
சி. பாலகுருநாதன்
மணமகன்
"பதி இல்லம்,"
சக்தி வாசா,
பளை. தெல்லிப்பளை.

மா. சின்னத்துரை,
பாரதி வீதி,
பத்தைமேனி,
அச்சுவேலி.

(சி 8991)

ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், சனி யாழ். பரியோவான் கல்லூரி இன்றைக்கட்கழகத்தினரால் இன்று நடத்தப்பட விருந்த இரண்டாம் நிலைச்சுற்றுப் பதற்ற நிலைமை காரணமாக பிற்போடப்பட்டுள்ளது.

ஹெலிதாக்குதல்

யாழ்ப்பாணம், னி தாழப்பறந்துவந்த இரு ஹெலிகொப்டர்கள் கோப்பாய், நாவற்குழி ஆகிய பகுதியை சுற்றிவளைத்து நேற்று பிற்பகல் பலத்த தாக்குதல் மேற் கொண்டன.

இச்சம்பவத்தையடுத்து தமிழீழ விடுதலைப்புலிகள் பொராளிகள் எதிர்த்தாக்கு தல் மேற்கொண்டனர்.

எதிர்தாக்குதலைத் தொடர்ந்துஹெலிகாப்டர்கள் இரண்டும் முகாம்திரும்பின. (எ)

கண்டன ஊர்வலம்

யாழ்ப்பாணம்,சனி யாழ். போதனா வைத்திய சாலையை மூடிவிடும்படியான அரசு பிறப்பித்த உத்தரவை வாபஸ் பெறுமாறு கோரி நேற்றுக்காலை யாழ் மாநகர சபையினரால் கண்டன ஊர் வலம் ஒன்று நடாத்தப்பட்டது.

நல்லூர் வீரமாகாளி அம் மன் கோவிலடியில் இருந்து மாநகர சபை ஆணையாளர் தலைமையில் ஆரம்பமான இந்த ஊர்வலத்தில் மாநகர சபை ஊழியர்கள், யாழ், மாநகர சபை சனசமூக நிலை நிலையங்கள், சங்கிலியன் மன் றம், பிரஜைகள் குழுக்களின் இணைப்புக்குழு, மற்றும் சன சமூக நிலையங்களும் கலந்து கொண்டன.

ஊர்வலம் பருத்தித்துறை வீதி, ஆஸ்பத்திரி வீதி, கண்டி வீதி வழியாக யாழ். செயலகத்தைச் சென்றடைந்து, அங்கு மேலதிக அரசாங்க அதிபர் திரு. எஸ். இராமநாதனிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது. [வா]

2-ம் ஆண்டு நினைவஞ்சலி



சுப்பிரமணியம் நேசதுரை (நேசன்)

அன்னையின் மடியில்:
06-04-1952

இறைவனடியில்:
09-05-1985

எம்குடும்பத்தின் ஒளிச்சுடரே, ஆசை மகனே, எமது அன்புச் சகோதரனே நேசமுடன் எம்முடனே நிழலாய் நின்றாய்; கயவனின் துப்பாக்கிச் சூட்டுக்கு இரையாகி ஈராண்டு கழிந்தாலும் நீர் எம் நெஞ்சத்தில் சுடரொளியாய் பிரகாசிக்கின்றாய். உன்பிரிவால் துயருறும்:

மனைவி, மக்கள், ஐயா, அம்மா, சகோதரிகள், தம்பி.

மூளாய் தெற்கு, சுழிபுரம். [சி 8996]

லிடோ யாழ். நகர்
10-30, 2-30, 6-30

சிவகுமார் -சுஹாஷினி நடித்த

சிந்து பைரவி

1986ம் ஆண்டு இந்திய ஜனாதிபதியின் சிறந்தவிருதைப்பெற்ற படம் சங்கீத இசைப்பிரியர்களுக்கோர் சிறந்த வரப்பிரசாதம்.

[புதிய வெளியீடு கலர்)

புதிய வெளியீடு

வெலிங்டன் திரையில்
10-30, 2-30, 4-30, 6-30

நவீனரக ஆயுதங்களுடன் பயங்கர சண்டைகள் நிறைந்தது.

Anthony Quinn - James Corburn
Lindsay Wagner in
HIGH RISK
(Colour)

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

இந்திய தலையீடு

(4ம் பக்கத் தொடர்ச்சி)

வலி கங்கைக்கரையில் புதருக்குள் அவசரமாக ஒளித்து வைக்கப்பட்டிருந்த ஆறு தானியங்கி ரைபிள்களையும் மூன்று சப் மெஷின் துப்பாக்கிகளையும் கண்டெடுத்துள்ளனர்.

வேறொரு இடத்தில் தடை செய்யப்பட்ட ஒரு அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் எனக்கூறப்படும் சிலர் கிராம வாசிகளின் உத்தரவு பெற்ற துப்பாக்கிகளைக் கவர்ந்து சென்றுள்ளனர்.

அம்பலாங்கொடைக்கு அருகில் மீட்டியாகொட என்ற இடத்தில் வான் ஒன்றைக் கைப்பற்றிய பொலிஸார் அதில் ஏராளமான ராணுவ உடைகள் இருப்பதைக்கண்டு பிடித்துள்ளனர்.

வெல்லவாயாவில் ராணுவ ஆயுதங்களை அபகரிப்பதற்கான முயற்சியொன்று நடந்துள்ளதாகவும் செய்திவந்துள்ளது.

ராணுவ முகாம்கள் வடக்கு கிழக்கில் தாக்கப்படும் போதும் அதுபோன்ற சம்பவங்கள் நடைபெறும் போதும் ஆயுதப்படையினர் நடந்து கொள்ளும் விதத்தைப்பற்றி தமிழ்ப் பிரதேச மக்களும் அரசாங்கமும் மாத்திரமே அறிவார்கள். தென்பகுதி சிங்கள மக்களுக்கு பெரும்பாலும் அவை அறிவிக்கப்படுவதில்லை. அனுபவரீதியாகவும் தெரியாது.

ஆனால் இதேபோன்ற சம்பவங்கள் தெற்கிலும் நடைபெறத் தொடங்குமானால் ஆயுதப்படைகளை வடக்கு கிழக்கில் நடந்து கொள்வது போலவே நடக்க அனுமதிக்க முடியுமா? ஆயுதப்படைகளும் அவ்வாறு நடந்து கொள்வார்களா?

1971ம் ஆண்டில் இடம் பெற்ற சிறீ எழுச்சிக்கும் இப்போதைய நடவடிக்கைகளுக்கும் நிறைய வித்தியாசம் உண்டு. சிறீ எழுச்சி என்பதால் சிறிமா அரசினால் உடனடியாக அடக்கிவிட முடிந்தது. அதன் தாக்கத்தை சிங்கள மக்களும் சிறிது காலத்தில் மறந்து விட்டார்கள். அதே பாணியில் அன்றிவடக்கு கிழக்கில் போன்று கொல்லாநடவடிக்கைகள் தெற்கில் பரவலாக நடக்க ஆரம்பிக்கும் பட்சத்தில் இந்த அரசாங்கம் தமிழ் பிரதேசத்தில் கைக்கொண்ட நடவடிக்கைகளின் தவறான போக்கு வெளிப்பட ஆரம்பிக்கும். ஏனெனில் இப் பிரதேசங்களில் போன்று அப்பாவி மக்களைச்சுற்றி வளைத்து சுடுகாட்டுக்கு அனுப்புவதோ இளைஞர்களை ஆயிரக்கணக்கில் கைது செய்து பூஸாவுக்கு அனுப்புவதோ சாத்தியமாகாது அரசைப்பதவியில் அமர்த்திய சிங்கள மக்கள் அதனை சகித்துக்கொள்ள மாட்டார்கள்.

-பி. எஸ். பி.

"ஷப்ரு"

யுனிக்கோ பிளைன்ஸ் லிமிட்டெட்
யாழ். அலுவலகம்

இடம் மாற்றம்

அன்பார்ந்த வாடிக்கையாளர்களே!

உங்கள் நலன் கருதி 'ஷப்ரு' நிதி நிறுவன அலுவலகத்தைப் பாதுகாப்பான இடத்திற்கு மாற்றியுள்ளோம்.

நீங்கள் குடாநாட்டின் எந்தப்பக்கத்திலிருந்து வருபவர்களாயிருந்தாலும் சரி எமது புதிய அலுவலகத்திற்குச் சிரமமின்றிப் பாதுகாப்பாகத் தயக்கமின்றி வந்துபோகலாம்.

ஆம், எமது அலுவலகம் நகரின் மத்தியில் **பலாலி வீதியும் நாவலர் வீதியும் சந்திக்கும் இடத்தில் நாவலர் வீதி, 230 ஆம் இலக்கக் கட்டடத்துக்கு இடம் மாற்றப்பட்டுள்ளது.**

1. மானிப்பாய் வீதி மூலம் யாழ். நகர் வரும் வாடிக்கையாளர்கள் ஐந்து சந்தியில் இறங்கி நாவலர் வீதி ஊடாகவும்—
2. காங்கேசன்துறை வீதி ஊடாக யாழ். நகர் வரும் வாடிக்கையாளர்கள் மணிக்கூராச் சந்தியில் இறங்கி நாவலர் வீதி ஊடாகவும்—
3. பலாலி வீதி மூலம் நகருக்கு வரும் வாடிக்கையாளர்கள் பலாலி வீதி நாவலர் வீதி இலுப்பையடிச் சந்தியில் இறங்கியும்—
4. பருத்தித்துறை வீதி மூலம் யாழ். நகருக்கு வருவோர் ஆனைப்பந்தி ஊடாகவும்—
5. பிரதான வீதி மூலம் யாழ். நகர் வரும் வாடிக்கையாளர்கள் ஆரியகுளத்திலிருந்து பலாலி வீதி ஊடாகவும்—

புதிய அலுவலகத்திற்கு இலகுவாக வந்துசேரலாம்.

எமது புதிய அலுவலகம் எதிர்வரும் திங்கட்கிழமை (11-5-87) தொடக்க இயங்கும் என்பதையும் கவனத்தில் கொள்ளுங்கள்.

மூளாய், சுழிபுரம், வட்டுக்கோட்டை, சித்தன்கேணி, சங்கானை, உடுவில், மானிப்பாய் பகுதி வாடிக்கையாளர்களின் நலன் கருதி மானிப்பாயில் உப அலுவலகம் ஒன்று விரைவில் திறக்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

—பொது முகாமையாளர்,
ஷப்ரு நிதி நிறுவனம்.
(ஏ 3986)

பிரயாண ஒழுங்குகள்

பாஸ் போட், விசா,
விமான சீட்டுகள்,
மாலை தீவு வேலை வாய்ப்பு.

மாலை தீவிற்கு போக விரும்புபவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். நோர்வே, நியூசிலன், ஜேர்மன் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

24 பேர் மாலை தீவிற்கு போய் விட்டார்கள்.

N. மகாதேவா

உப்புமடம் சந்தி, K. K. S. வீதி,
கோண்டாவில் மேற்கு.

(சி- 9003)

"டிப்ளோமா" பட்டதாரி ஆசிரியர்களுக்கு தண்டனையா?

சம்பள முரண்பாடு குறித்து ஆசிரியர்கள் கவலை

நெல்லியடி, வெள்ளி

கல்வி டிப்ளோமா தராதரத்துடன் கூடிய பட்டதாரி ஆசிரியர்களுக்கு தற்போது வழங்கப்படும் புதிய சம்பளத் திட்டத்தின்படி பாரபட்சம் காட்டப்படுவதாக ஆசிரியர்கள் மத்தியில் பெரும் அதிருப்தி நிலவுகிறது.

இதுவரை காலமும் கல்வி டிப்ளோமா செய்த பட்டதாரி ஆசிரியர் 1300 ரூபா அடிப்படைச் சம்பளமும் ஏனைய பட்டதாரி ஆசிரியர்களுக்கு 1200 ரூபாவும் கொடுக்கப்பட்டு வந்தது. அண்மையில் சம்பள மாற்றுத் திட்டம் கல்வி அமைச்சினால் நடைமுறைப் படுத்தப்பட்ட பின்பு டிப்ளோமா பட்டதாரி ஆசிரியர்களுக்கு ரூபா 1380 ரூபாவும் டிப்ளோமா தகைமை பெறுத வர்களுக்கு 1440 ரூபாவும் வழங்கப்படுகிறது.

ஏனைய பட்டதாரி ஆசிரியர்களை விட டிப்ளோமா தகைமை பெற்றவர்களுக்கு குறைந்த சம்பளம் வழங்குவது டிப்ளோமா தகைமை பெற்றவர்களுக்குக் கிடைக்கும் தண்டனையா என ஆசிரியர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

வவனியாவில் ஒரேஇரவில் பத்து வீடுகளில் ஆயுதபாணிகள் கொள்ளை

(வவனியா நிருபர்)

வவனியா மகா இறம்பைக்குளத்தில் ஒரே இரவில் பத்து வீடுகளில் ஆயுதம் தாங்கிய வாகள் அரைகுறையானத் தமிழில்பேசி கொள்ளை அடித்துள்ளனர்.

கடந்த ஞாயிறன்று நள்ளிராவு இடம் பெற்ற மேற்படி சம்பவம் குறித்து வவனியா மாவட்டபிரஜைகள் குழுவிடம் புகார் செய்யப்பட்டுள்ளது.

நகைகள், பணம், பெறுமதி வாய்ந்த பொருள்களை இவர்கள் கொள்ளை அடித்துள்ளனர்.

கொள்ளைபோன பொருட்களின் பெறுமதி சரியாக கணிக்கப்படவில்லை.

சுமார் பத்துபேர் கொண்ட கோஷ்டியே இச்சம்பவத்தில் ஈடுபட்டுள்ளதாக தெரியவருகின்றது.

சங்கானை ப. நோ. கூ. சங்க முகாமையாளர் விளக்கம்

யாழ்ப்பாணம், சனி

"சங்கானை கிராமிய வங்கியில் 60 வீதமான ஓய்வூதியம் மட்டுமே வழங்கப்பட்டது". என்று ஈழநாட்டில் 24-04-87 திகதி வெளியானசெய்தி குறித்து சங்கானை ப.நோ.கூ.சங்க பொதுமுகாமையாளர் திருமதி ப. மகேஸ்வரி பின்வரும்விளக்கத்தைதெரிவித்துள்ளார்:

எமதுகிராமியவங்கியில்800க்கு மேற்பட்ட ஓய்வூதியம் பெறுபவர்களும்100க்குமேற்பட்ட சம்பளம் பெறும்வாடிக்கையாளர்களும் உள்ளனர். எமது வங்கியின் ஊடாக மாதாந்தம் 11 லட்சம்வரைபணம் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படுகிறது. கிராமிய வங்கியானது மேற்படி பணத்தை சங்கத்திற்கு காசோலையை செலுத்திப் பெறுகிறது. சங்கமானது தனது சுழற்சிப் பணத்தின் மூலமே கொள்வனவுகளைமேற் கொள்வதுடன் பணியாளர் சம்பளத்தையும் வழங்குகிறது. சங்கத்தின் வங்கிமக்கள் வங்கியாகக்காணப்படும் இடத்தும் தற்போதுநாட்டில்நிலவும் பணமுடை காரணமாக கோட்டை வங்கிகள் யாவும் இயங்காதுள்ளமைமக்கள் அறிந்ததே. எனவே கோட்டை வங்கியிலிருந்தும் பணம் பெறும் நிலை கிராமியவங்கிக்கு கிடைக்கவில்லை.

எமது வங்கியின் மூலம் ஓய்வூதியம் ஏழு வேலைநாட்களுக்குள் கிராம அடிப்படையில் நாளாந்தம் 125 நபர்களுக்கு வழங்கப்படுகிறது. மாதமுதல் திகதியில்பெறப்படும் மலேயன் ஓய்வூதிமமானது கடந்த ஏப்பிரல் மாதத்திற்குரிய ஓய்வூதியக் காசோலை எமது வங்கிக்கு 09-04-87ம் திகதி பெறப்பட்டது. இவ் ஓய்வூதியம்இலங்கை வங்கி காசோலையாக வழங்கப்டுகிறது. இக் காசோலையானது எமது வங்கிக்கணக்கில் வைப்பிலிடப்பட்ட பின்பே ஓய்வூதியம் 17-04-87ல் வழங்கப்பட்டது. இலங்கை ஓய்வூதியம் 10-04-87ம் திகதி பெறப்பட்டது. தொடர்ந்து நான்கு நாட்கள் விடுமுறையென்பது நோக்கற்பாலது. இதைத் தொடர்ந்து 60% மான சுமார் 5 லட்சம் வரையிலான பணம் சேகரித்தபின்பே ஓய்வூதியம் வழங்க ஆரம்பிக்கப்பட்டது. 20ம்திகதி முதல் ஓய்வூதியம் வழங்கப்பட்டது: ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு எமது நிலைப் பாட்டை தெரிவித்துஅதாவது 60%பணமாக வழங்கப்படும். மிகுதி40% வைப்பிலிடப்பட்ட பின் காசோலையாகவோ பணமாகவோ வழங்கப்படும். கிளைகளில் பொருள் கொள்வனவு செய்யவிரும்புவோருக்கு உடனடியாக40% எமது கிளைகளில் பொருட்கள் கொள்வனவு செய்வதற்கு உறுதிச் சிட்டை வழங்கப்பட்டது இதனை ஓய்வூதியம் பெறுபவர்களும் ஏற்றுக் கொண்ட பின்னரே ஓய்வூதியம் வழங்க ஆரம்பிக்கப்பட்டது எமது கிராமிய வங்கியானது இன்று சேவையினையே முதல் நோக்கமாக கொண்டு இயங்கிவருகிறது.

கரைச்சிலயன்ஸ் தலைவர்

(கிளிநொச்சி நிருபர்)

கரைச்சி லயன்ஸ் கழகத்தின் புதிய தலைவராக கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அபர் எஸ். அமிர்தலிங்கம் தெரிவானார்.

மேற்படி லயன்ஸ்கழகத்தின் தலைவராக பணிபுரிந்துவரும் வேளையில் கிளிநொச்சியில் இடம்பெற்ற அசம்பாவிதத்தின்போது பலியான ஏ. கே. இராசேந்திரத்தின் இடத்திற்கே மேலதிக அரச அதிபர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

வண. எஸ். ஜெயநேசன் அடிகளார்தலைமையில்கரைச்சி லயன்ஸ்கழக கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

லயன் கழக செயலாளராக புகையிரத நிலைய அதிபர்எஸ். சிவராசசிங்கம் தெரிவானார்.

இக்கூட்டத்தில் அமரர் ஏ. கே. இராசேந்திரத்தின் மறைவிற்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

தொழிலாளியைத்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

என்று இச்சம்பவத்தைப் பார்த்த சிலர் புலிகளுக்கு தகவல் கொடுத்ததைத் தொடர்ந்து அவ்விடத்துக்குச் சென்று சம்பந்தப்பட்ட இருவரையும் விசாரணை செய்து தண்டனை வழங்கப்பட்டதாக தெரியவருகிறது.

அதிக பணம்...

எமது வட்டி விகிதத் திட்டங்களைப் பாருங்கள் எம்மிடம் முதலீடு செய்வதே உங்கள் பணத்தைப் பெருக்குவதற்குப் பாதுகாப்பான, நிச்சயமான வழியென்பதைப் புரிந்து கொள்வீர்கள்.

1987ம் ஆண்டுக்கான வட்டி விகிதங்கள்

வைப்புக்கள்	3 ஆண்டுகள்		2 ஆண்டுகள்		1 ஆண்டு		6மாதங்கள்	3மாதங்கள்
	முதிர்ச்சியில்	மாதாந்தம்	முதிர்ச்சியில்	மாதாந்தம்	முதிர்ச்சியில்	மாதாந்தம்	முதிர்ச்சியில்	முதிர்ச்சியில்
ரூ:200,000உம் அதற்கு மேலும்	25%	19%	23%	19%	17%	15%	15%	14%
ரூ:100,000உம் ரூ:200,000க்கு குறையவும்	23%	19%	20%	17%	17%	15%	15%	14%
ரூ:1,000உம் அதற்கு மேலும்	22%	18%	19%	16%	17%	15%	15%	14%

Vinds/SF/15

அதிக நன்மைகள்...

- மொத்த வைப்புத் தொகையில் 40% க்கு மேற்பட்டதை எமது முதலீடுகளின் நடப்புச் சந்தைப் பெறுமதியே ஈடு செய்கின்றது.....
- 25 ஆண்டுகளுக்கும் மேலாக ஆயிரக்கணக்கான வாடிக்கையாளர்களுக்குக் கிரமமான வருமானத்தை உறுதி செய்து வருகிறோம்

அதிக உத்தரவாதம்...

- அதிகபட்ச அந்தரங்கத் தன்மையையும் இலகுவான கொடுக்கல் வாங்கல்களையும் உறுதிப்படுத்தும் நம்பகமான கண்ணிய சேவை.....

நிதி நிலைமைத் தகவல்கள்

	1985/86 ரூபா	1984/85 ரூபா	1983/84 ரூபா
மூலதனம்	1,700,000	1,700,000	1,700,000
மூலதன ஒதுக்கீடு	14,926,300	9,944,500	9,944,500
வருவாய் ஒதுக்கீடு	4,326,547	1,452,653	1,200,764
மூலதனமும் ஒதுக்கீடும்	20,952,847	13,097,153	12,845,264
சேமிப்புகள்	139,700,253	123,346,021	90,507,406
கடன்கள்	471,077	1,484,621	3,211,633
சேமிப்பாளர்களுக்கு வட்டி வழங்கும் முன் இடைத்த லாபம்	28,940,000	24,658,633	23,101,763
சேமிப்பாளர்களுக்கு வழங்கிய வட்டி	26,066,107	23,306,744	20,060,740
வரிவிதிக்கும் முன் இடைத்த நிகர லாபம்	2,873,894	1,351,888	3,041,023
வரிவிதித்தபின் இடைத்த நிகரலாபம்	2,873,894	1,351,888	3,041,023
ஆதாய பங்குவிதம்	—	1,100,000	2,295,000
	—	65%	135%

இயக்குநர்கள்:
எச். எல். கூரே— தலைவர்
மாசட்டத்தரணி (இன்னர் டெம்பள்) சட்டத்தரணி
F. B. I. M. (Eng) A. C. I. (Lond.)
எம். வி. நியாகராஜா, உபதலைவர்,
F. C. M. A., F. C. I. A. A., F. B. I. M.
பி. ஞானசேகரம், செயலாட்சி இயக்குநர்
ஜே. சி. ஆர். குரே
F. C. M. A. M. B. I. M.
பீரசன்ன எல். குணவர்தன
J. P. U. M. A. C. I (Lond) A. I. Arb. (Lond)
சட்டத்தரணி, கூட ஆலோசகர், தொத்தாரிக

பிரதான தொழில் துறைகள்
தவணைக் கொள்வனவுக்கு நிதியளித்தல்,
குத்தகை, கடன் மீள்வுக்கு நிதியளித்தல்.

நீங்கள் ரூ. 1000/- முதலீடு செய்து கிரமமான வருமானம் பெற விரும்பினாலுஞ் சரி நம்பிக்கையான ஓர் இடத்தைத் தேடும் பெரிய முதலீட்டாளராக இருந்தாலுஞ்சரி இன்றே எம்மைநாடுங்கள். பணத்தைப் பெருக்கி நன்மைகளைப் பெற அதுவே வழி.

நம்பிக்கையோடு முதலீடு செய்யுங்கள்

SFL ESTD 1959

ஸ்ரான்டேர்ட் பிஞன்ஸ் லிமிட்டெட்,

த. பெ. இல. 1644, 481, ரி. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு-10 தொலை பேசி: 597111, 59841

1959 டிசெம்பர் 31இல் கூட்டிணைக்கப்பட்டது.

'யாழ். வைத்தியசாலையை மூடும் அரசின் ஆணை

தமிழ்மக்களை முழுமையாக அழித்தொழிக்கும் இறுதி நடவடிக்கை''

யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம்

யாழ்ப்பாணம் சனி

''யாழ். மாவட்டத்தில் மட்டுமன்றி, வெளி மாவட்டங்களிலும் வாழும் பல இலட்சம் தமிழ் மக்களுக்குச் சேவையாற்றும் யாழ். போதனா வைத்தியசாலையை மூடும்படி அரசு ஆணைபிறப் பித்துள்ளமை தமிழ் மக்களை முற்று முழுதாகவே அழித் தொழிப்பதற்கான இறுதி நடவடிக்கையாகும்''

இவ்வாறு யாழ். பல்கலைக் கழக ஊழியர் சங்கம் விடுத் துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது. அவ்வறிக் கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

பல்லாண்டுகாலம் மக்களுக் குச் சேவைசெய்யும் ஒரு வைத் தியசாலையை ஒரு சில ஆண்டு களுக்கு முன் அமைக்கப்பட்ட ஒரு இராணுவ முகாமின் நட வடிக்கைகாக மூடும்படி ஆணை யிடுவது பாதணியின் அளவிற் குப் பாதத்தை வெட்டுவது போன்றொரு செயலாகும். அரசின் இத்திட்டமிட்ட இன ஒழிப்பு நடவடிக்கையை எமது சங்கம் வன்மையாகக் கண்டிப் பதுடன், உயர் பதவிகளில் இருப்போர் அரசின் இச்செய லைத் தடுத்து நிறுத்த உடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் கேட்டுக் கொள்கின்றது.

ஆங்கிலேயர் ஆட்சியிலி ருந்து இலங்கை சுதந்திரம் பெற்றிருந்தும், தமிழினம் ஆளும் பெரும்பான்மையிட மிருந்து காலங்காலமாக சுதந் திரம் பெறும் நிலையில் அடக்கி ஒடுக்கி நசுக்கப்பட்டுவருகி றது. இந்நிலையிலிருந்து எமது இனத்தை மீட்டெடுப்பதற் காக எமது இளைஞர்களால் ஆரம்பிக்கப்பட்ட இன்றைய விடுதலைப் போராட்டத்தைப் பயங்கரவாதம் என்னும் முத் திரையுடன் உலகிற்குப் பறை சாற்றிவருகிறது ஸ்ரீலங்கா அரசு. பயங்கரவாத ஒழிப்பு என்ற போர்வையில் தமிழின த்தை அழித் தொழிக்கும் நோக்குடன் தரை, கடல், ஆகாய மார்க்கமாக முழுமூச் சுடனான முப்படைத் தாக்கு தல்கள் நாளாந்தம் நடாத்தப் பட்டு வருகின்றது.

ஆலயம், கல்விக்கூடம், மருத் துவமனை, வீடுகள் போன்ற தமிழரின் பாரம்பரியச் சொத் துக்கள் அழிக்கப்பட்டு தமிழ ரின் பொருளாதாரம் முற்று முழுதாகச் சீர்குலைக்கப்பட் டு வருகிறது. எரிபொருள் தடை, தெலிலேபேசித்தடை, பொருளாளா ரத் தடை போன்றதடைகளாலும், கடல் வலயத் தடைச்சட்டம், ஆயி ரம் மீற்றர் வலடச் சட்டம் போன்ற சட்டங்களாலும் சொந்த நாட்டிலும், சொந்த வீட்டிலும் வாழமுடியாதபடி தமிழினம் அகதிகள் அந்தஸ் தி ற் கு ள் ளா க் கப்பட்டிருக்கி றது. இந்நிலையில் தான் பல லட்சம் தமிழ்மக்களுக்குச் சேவையாற்றும் யாழ் வைத் தியசாலையை மூடிவிடும்படி அரசு பணித்துள்ளது.

உயிர் வாழ்தலும், உடல் நல முமே மனித வாழ்வின் முக் கிய அம்சங்களாகும். இதற்கு ஆதாரமான வைத்திய நிலை யத்தையே மூடும்போது அலு வலகங்கள், ஆலைகள், கல்விக் கூடங்கள், பல்கலைக்கழகங் களால் பயனென்ன? எனவே வைத்திய நிலையத்தை மூடும் அரசின் இந்நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும்முக மாக தமிழீழத்தில் அலுவல கங்கள் ஆலைகள், கல்விக்கூடங் கள், பல்கலைக்கழகங்கள் போக் குவரத்துக்கள் அனைத்தையும் ஸ்தம்பிக்கச் செய்யவேண்டும். இதன் மூலம் தமிழனின் பரி தாப நிலையைச் சர்வதேச அரங்கிலும், ஐ. நா. மன்றத் திலும், எதிரொலிக்கச் செய்ய அனைத்துத் தொழிற் சங்கங்களும் ஸ்தாபனங்களும் முன்வரவேண்டுமென்று எமது சங்கம் கேட்டுக்கொள்கின்றது.

நூல் வெளியீடு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், சனி

பேராசிரியர் ப. சந்திரசேக ரம் எழுதிய ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸ தத்துவம் என்ற நூல் வெளியீடு கற்போதைய சூழ்நிலை காரணமாக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

நாவலர் கலாசார மண்ட பத்தில் பேராசிரியர் சு. வித்தி யானந்தன் தலைமையில் இவ் வெளியீட்டு வைபவம் இன்று மாலை நடைபெற ஏற்பாடாகி யிருந்தது.

இவ் வைபவத்தை ஏற்பாடு செ ய் த திருநெல்வேலி இராம கிருஷ்ணாலயம் நிர்வாக இயக்கு நர் இரா மகேந்திரசிங்கம் இந்த ஒத்திவைப்புப் பற்றி அறிவித்துள்ளார்.

இன்றைய பலன்

மாதம்: சித்திரை
திகதி- 26 (9 - 5 - 1987)
கிழமை- சனி
திதி- ஏகாதசி
நட்சத்திரம்- உத்தரம்

மேடம்: குழுறும் நெஞ்சத் துடன் நாளைக்கழிப்பீர்கள் பொருளாதார வீழ்ச்சியேற் படும். கடமையிலும் கண்ணி யம் தவறும்.

இடபம்: இலட்சியப்பாதை யில் வீறுநடை போடுவீர்கள். புதிய சூழ்நிலை உருவாகும். பொதுமக்கள் ஆதரவும் தலை காட்டும்.

மிதுனம்: பொருட் செல் வாக்கு வளரும் வாகனம் கொள்முதல் செய்ய உகந்த தினம். கல்வி முன்னேற்ற முண்டாம்.

கடகம்: எதிர்பார்த்த வேத னம் கைகூடலாம். தேடிய உறவு நாடியே வரும் இல்லச் சிறப்புமுண்டாம்.

சிங்கம்: தூற்றல் கூட தொடுப்பதற்கு சிலர்முனைவர் குறை கேட்க நேரிடும் குடும் பப் பிரிவும் தோன்றலாம்.

கன்னி: மனப் போராட்டம் அதிகரிக்கும். கடன் தொல்லை உருவாகும். மிகையான போக்கினாலே மனதும் பாழா ய்ப் போகும்.

துலாம்: கற்றதன் பயன் இன்று கைமேல் கிட்டும். வியாபார விருத்தியுண்டு. உறவு முறைகள் சுமுகமான தாக விருக்கும்.

விருச்சிகம்: பழைய நினைவு கள் அமைதியைக் குலைக்கும். குடும்பக்கவலை அதிகரிக்கும். பொன் பொருள் விரைய முண்டு. அவதானம்.

தனுசு: நல்லதைச் செய்வீர் கள். நலன் பெருகும். வசதி யான வாழ்வும் சேரும். சுமாரான தினம்

மகரம்: அரசியல்வாதி களுக்கு அதிர்ஷ்டதினம். வெற்றிப்பாதையில் வீறுநடை போடுவீர்கள் தொழில் திருப்தி யுண்டு

கும்பம்: பேராசையின் மூலம் குறுக்கு வழிகளை நாடு வீர்கள். நிதியில் முடக்கம் தென்படும் குடும்பத்திலும் பதற்றநிலை உருவாகும்.

மீனம்: வாழ்க்கை இன்று அமைதியாகச் செல்லும். தொழில் நலனுமுண்டாம். சிறுக்கு திடீர் திருமணமும் நடைபெறலாம்

திருமலை ரவீந்திரன்

உலக நாடுகள் இலங்கையின் பொய்க் கூற்றுகளை உணரவேண்டும்

நெல்லியடி, வெள்ளி

''விமானக் குண்டுத் தாக்கு தல் இடை நிறுத்தப்பட்டுள்ள தென அரசு கூறுவதுஅப்பட்ட மான பொய் என்பதை உலக நாடுகள் உணரவேண்டும். துயில்கொள்ளும் இரவு நேர மாகிலும் ஷெல் அடிகாரண அப்பாவிப் பொதுமக்கள் பலி யாகிவருகின்றனர். இந் நிலை யில் ஜனநாயக நாடுகள் குறிப்பாக இந்தியா இதுபற்றி இலங்கை அரசைத் தட்டிக் கேட்கவேண்டும். இந்தியா அந்நிலையிலிருந்து வறுமா யின் உலகிலேயே ஜனநாயகம் குழிதோண்டிப் புதைப்பதற்கு வழிவகுத்த குற்றத்துக்கு ஆளாக வேண்டிவரு .

இவ்வாறு நெல்லியடி பிர தேச விடுதலைப் புலிகள் தீவிர புலன் விசாரணையில் ஈடுபட்டு வருகின்றனர்.

பண்டத்தரிப்பில்

நள்ளிரவுவேளையில் வீடு ஒன் றின் ஜன்னலைப் பிரித்து உட் புகுந்த திருடர்கள் தங்கச் சங் கிலி, காப்புகள், வெளிநாட்டு சாரிகள் ஆகியவற்றை கொள் ளையடித்துச் சென்ற சம்பவம் பண்டத்தரிப்பில் நிகழ்ந்துள் ளது.

பண்டத்தரிப்பை சேர்ந்த அருள்நேசன் என்பவரது வீட் டில் நடைபெற்ற இத்திருட் டுச் சம்பவம் குறித்து பிரதேச விடுதலைப்புலிகள் இயக்க அலு வலகத்தில் முறைப்பாடு செய் யப்பட்டுள்ளது.

12 வீடுகள் தீக்கிரை

திருமலை, வெள்ளி

கிண்ணியாவிலுள்ள சூரங் கல் என்னும் கிராமத்துக்குள் கடந்த மாதம் 22ம் திகதி சென்ற பாதுகாப்புப் படை யினர் அங்கு 12 வீடுகளைத் தீக்கிரையாக்கினர். நல்லரத் தினம் சுதாகரன் (18) பி. நட ராசா (33), கே. செல்வநாய கம் (34). கே. சத்தியசீலன் (35), ஆகிய நால்வரையும் கைது செய்தனர்.

யன்னலைப் பிரித்து கொள்ளை

பண்டத்தரிப்பு,வியாழன்

வடலியடைப்பிலுள்ள வீடு ஒன்றில் நள்ளிரவு நேரத்தில் யன்னலை உலக்கை ஒன்றினால் பிரித்து உட்சென்ற திருடர் கள் அங்கிருந்த வெளிநாட்டு விலையுயர்ந்த சாரிகள் உட்பட மற்றும் சில பொருட்களை கொள்ளையடித்துச் சென்றுள் ளனர்.

சுமார் 35 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டதாக அறியப்படுகின்றது இக்கொள் ளைச் சம்பவம் குறித்து பிர தேச விடுதலைப் புலிகள் தீவிர புலன் விசாரணையில் ஈடுபட்டு வருகின்றனர்.

Remembrance

Thanking all those who attended the funeral to those who sent condolence messages wreaths and who attended requisition Mass at St Antony's Church in memory of our Loving

JOSEPH JESUTHASAN

who passed away at his tender age in Jaffna Hospital due to shelling.

Beloved wife
Pathmaranee,
IN-LAWS
Mr. & Mrs Ramanathan (Retired teachers),
Mrs Pushpawathy Antony (H F.C Jaffna),
Mr Ramanathan Seevaratnam (Canada),
Mrs P kialeela Cherubim (Lecturer),
Mr. Ramanathan Jeyasingam (Attorney-at-law),
Mr. Ramanathan Jeyarajah (Teacher),
Mr Ranganathan Jeyaseelan (Master teacher).

[C-8992]

சிவமயம்

குரு பட்டாபிஷேகம்

பிரபவ வருஷம் சித்திரை 21-ம் நாள் (10-05-87) ஞாயிற்றுக்கிழமை காலை 8-15 மணி முதல் 10-15 மணி வரையுள்ள மிதுன லக்ன சுபமுகூர்த்தத்தில் எனது புதல்வனும் ஏழாலை அம்பலவாணேசர் ஆலய அர்ச்சகருமாகிய நாகேஸ்வர சர்மாவுக்கு மயிலணி முருகன் சந்நிதானத்தில் ஆசார்யாபிஷேகம் செய்து வைக்கப்படும்.

இங்ஙனம்
மு. சிவகடாட்சக குருக்கள்,
மயிலணி, சுன்னாகம்.

[ஏ-3984

எமது நேற்றைய புதிய வெளியீடு

★ அர்ஜுன் ★ சசிகலா ★ பபிதா

''தங்க நாகம்''

★ நரசிம்மராஜ் ★ மாதவி ★ நாகேஷ்

''ஜெய் வேதாளம்''

குணம் வீடியோ சென்ரர்,
42, மணிக்கூட்டுவீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23665 [ஏ-3985]

இன்றுமுதல்

வாடிக்கையாளரின் பாதுகாப்பை முன்னிட்டு
தற்காலிக இடமாற்றம்

''சீமாட்டி ஜவுளி சமுத்திரம்''
''சீமாட்டி பான்ஸி குட்ஸ்''

மலிவு விற்பனை:

''சுமங்கலி''
531, பலாலி வீதி,
[யாழ். பல்கலைக்கழகம் அருகாமையில்]
திருநெல்வேலி.

இலை:- சுன்னாகம்.

[சி-8900]

"நீதிமன்ற ஊழியர்கள் நேர்மை, கடமையுணர்வுடன் செயலாற்றவேண்டும்''

யாழ்ப்பாணம், சனி

நீதிமன்றங்களில்கடமை புரி யும் ஊழியர்கள் மிகவும் நேர் மையாகவும் கடமைஉணர்ச்சி யுடனும் செயலாற்ற வேண் டும். நீதிமன்றங்களுக்கு வரும் பொதுமக்களுடன் அன்பாக பண்பாக கண்ணியமாகப் பழகவேண்டும் அவ்வாறு தமது கடமைகளைச் செய்யும் ஊழியர்கள் சகலரினது மதிப் பையும் பெறக்கூடியதாகவிருக் கும் ''

ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றத்திலிருந்து அண்மை யில் மாற்றலாகிச் சென்றுள்ள ஊழியர்களுக்கு சக ஊழியர்க ளால் அளிக்கப்பட்ட மதிய போசனவிருந்துபசார த்தில் உரையாற்றிய ஊர்காற் றுறை மாவட்ட நீதிபதி திரு வி. பி. சுந்தரலிங்கம் மேற் கண்டவாறு கூறினர்.

ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்ற ஊழியர்களான திரு வாளர்கள் க. பொன்னம்பலம் க. திருஞானம், எஸ். மகேந் திரன் ஆகியோர் அண்மை யில் மற்றலாகிச் சென்றவர்க ளாவர்.

தொடர்ந்து உரையாற்றிய மாவட்ட நீதிபதி மேலும் கூறியதாவது:

மாற்றலாகிச் செல்லும் இவ் ஊழியர்களும் தமது கடமை களை மற்றவர்கள் பாராட்டக் கூடியவிதத்தில் மட்டுமன்றி சகல ஊழியர்களுக்கும் எடுத் துக் காட்டாகவும் ஆற்றினர் கள்.

நல்ல சேவை மனப்பாங் குடைய ஊழியர்கள்தான் நீதிமன்றுக்குத் தேவை. நீதிச் சேவை ஒரு புனிதமானசேவை என மதித்து ஊழியர்கள் செயலாற்றவேண்டும்.

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

சனிக்கிழமை 9 5-87

திருமலையில் ராணுவம் தேடுதல் நடவடிக்கை 5 பேர் சுட்டுக்கொலை; 450பேர்கைது

திருமலை, வெள்ளி திருமலைப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இராணுவத் தேடுதல் நடவடிக்கையில் ஐந்து தமிழ் இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதுடன் 450க்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் அதிகாலை முதல் நண்பகல்வரை இடம் பெற்ற இத்தேடுதல் நடவடிக்கை பற்றி மேலும் தெரிய வருவதாவது:-

சம்பவதினம் அதிகாலை நாலு மணியளவில் திருமலை கோட்டை இராணுவ முகாமிலிருந்து கவச வாகனங்கள் சகிதம் வெளியேறிய 500க்கும் அதிகமான இராணுவம் திருகோணமலை நகரைச் சுற்றி வளைத்துத் நடாத்திய தேடுதலின்போது நகரில் 3 தமிழ் இளைஞர்கள் சுட்டுக்கொல்லப் பட்டனர். 350க்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை அன்புவழிபுரம், செல்வநாயகபுரம் ஆகிய பகுதிகளிலும் இராணுவம் தேடுதல் நடாத்தியபோது இரண்டு இளைஞர்கள் சுட்டுக்கொல்லப் பட்டனர். 100க்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட அனைவரும் திருகோணமலை கோட்டையில் வைக்கப்பட்டுள்ளனர்.

(உ)



யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் திரு. இராமநாதனிடம், யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் யாழ். ஆஸ்பத்திரியை மூடும் அரசின் முடிவை ஆட்சேபித்து மகஜரை கையளிப்பதைக் காணலாம்.

வடமராட்சியில் ஆர்பாட்ட ஊர்வலம்

பருத்தித்துறை, வெள்ளி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையை மூடும்படி அரசாங்கம் உத்தரவு பிறப்பித்ததற்குக் கண்டனம் தெரிவித்து வடமராட்சிப் பகுதி மக்கள் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடாத்தி கரவெட்டி உதவி அரசாங்க அதிபரிடம் மகஜரொன்றையும் கையளித்தனர்.

வர்த்தகவங்கி இயங்கியது

யாழ்ப்பாணம், சனி. யாழ்ப்பாணம் வர்த்தக வங்கி நேற்று முன்தினம் வழமை போல இயங்கியதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வங்கி நேற்று முன்தினம் இயங்கவில்லை என்று நேற்றைய ஈழநாடு இதழில் வெளியான செய்தி தவறென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சென்னையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டம் ஒன்றை நடத்தினர்கள், வள்ளுவர் கோட்டத்திலிருந்து ஆரம்பமாகி இலங்கை துணைத் தூதராயம் வரை சென்ற ஆர்ப்பாட்ட ஊர்வலத்தைப் பொலிசார் தூதராலயத்திற்குச் சுமார் நூறு மீற்றர் தூரத்தில் தடுத்து நிறுத்தினர்கள். [எ]

இலங்கை

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பெற்ற கவனயீர்ப்புத் தீர்மானத்தில் பேசுகையில் கூறினார்.

அதைத்தொடர்ந்து பேசிய திராவிட முன்னேற்றக்கழக உறுப்பினர் திரு. வை. கோபாலசாமி, இலங்கைத் தமிழரைக் காப்பாற்ற இந்தியா ராணுவ நடவடிக்கையில் இறங்கும் பொருட்டு தமது கொள்கையை மாற்றிக் கொள்ள வேண்டும் என்றார்.

யாழ் குடாநாட்டில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இணைஅமைச்சர் அங்கு மேலும் உரையாற்றுகையில் "இலங்கை அரசாங்கத்துக்கும் போராளிகளுக்குமிடையே சந்தேக உணர்வு வளர்ந்துவருவதால் தமிழர் பிரச்னைக்கு பேச்சுவார்த்தைமூலம் தீர்வு காணும் சாத்தியம் அரிதாகி வருகிறது.

இனப்பிரச்னைக்கு ராணுவ தீர்வே காணப்படுமென இலங்கை அரசு கூறியிருப்பது இந்தியாவுக்கு கவலையைத்தருகிறது. ஐக்கிய இலங்கை என்ற கட்டுக்கோப்பின் தமிழரின் அபிலாசைகளைத் தர்க்கக் கூடியளவிலான தீர்வு ஒன்று காணப்படவேண்டும் எனக் கூறினர்.

யாழ். ஆஸ்பத்திரி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை கோட்டை முகாமிலிருந்து ஆஸ்பத்திரி பிரதேசத்தை நோக்கித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படாதென்றும் போராளிகளும் அவ்வாறே ஆஸ்பத்திரி பிரதேசங்களிலிருந்து முகாமை நோக்கிய தாக்குதல்களை நிறுத்தவேண்டும் என்ற நிபந்தனையும் வைக்கப்பட்டதாம்

மேலும் யாழ் ஆஸ்பத்திரி பிரதேசத்தை அமைதிப்பிராந்தியமாக போராளிகள் ஏற்றுக்கொள்ளும்வகையில் அவர்களுக்கு வழங்கப்பட்ட இறுதிச் சந்தர்ப்பம் இது என்று அரசதரப்பு பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளாராம். (எ)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1987-ம் ஆண்டு மே மாதம் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/ /81 Eelanadu. P. O. Box Telegram, Eelanadu. Telephone:— 22389 24126.

5தினங்களுக்கு மின் தடை

யாழ்ப்பாணம், சனி யாழ்ப்பாணம், கிளிநொச்சி பகுதிகளில் எதிர்வரும் 15ம் திகதி முதல் 19ம் திகதி வரை ஐந்து தினங்களுக்கு காலை ஏழு மணி முதல் மாலை ஐந்துமணி வரை மின்சாரம் தடைப்படுத்தப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

செயலகம் இயங்கவில்லை

[சுண்டிக்குளி]

யாழ். செயலகமும் மற்றும் திணைக்களங்களும் நேற்று நாலாவது நாளாக இயங்கவில்லை.

பிரச்னைகள் குறித்து ஆராயப்படும்

யாழ்ப்பாணம், சனி யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் வெளிமாவட்டத்திலுள்ள சகல மாணவர்களும் எதிர்நோக்கும் பிரச்னைகளை ஆராய்வதற்காக இன்று தொடக்கம் 11-ம் திகதிவரை காலை 9 முதல் நண்பகல் 12 மணிவரை மறுமலர்ச்சிக்கழகத்தில் வந்து தொடர்பு கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். வந்த 75 லொறிகள் மதவாச்சியில்

யாழ்ப்பாணம், சனி. கொழும்பிலிருந்து உணவுப் பொருள்களுடன் யாழ்ப்பாணம் வந்த 75 லொறிகள் மதவாச்சி பொலீஸ் நிலையத்தில் கடந்த இரு நாட்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

(வா)

மரண அறிவித்தல்

திருமதி அருந்தவநாயகம் சிதம்பரம்

மண்ணுலகம்: 14- 12- 1924

விண்ணுலகம்: 03- 05- 1987

புலோலி மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட வரும், இல: 328, இராமநாதபுரம், கிளிநொச்சியில் வசித்தவரும், வவனியா விளாத்திக்குளம் அ. த. க. பாடசாலை முன்னாள் அதிபருமான திருமதி அருந்தவநாயகம் சிதம்பரம் 3-5-1987 அன்று காலமாகிவிட்டார். அன்னார் சிக்கத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. பெ சிதம்பரம் (முன்னாள் ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், சிவயோகம் (ஆங்கில ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, பேராதனை), சிவகுமார் (சட்டத்தரணி, லண்டன்), சிவனேஸ்வரி (பி. எஸ். ஸி. ஆசிரியை, வவனியா), சிவபாலன் (மாணவன்) ஆகியோரின் அருமைத் தாயாரும், திரு. ஆறுமுகம், செல்வி. பார்வதி (ஆசிரியை), திரு. தியாகராஜா ஆகியோரின் சகோதரியும். திருமதி மு. தெய்வானைப்பிள்ளை, திரு. வல்லிபுரம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார். அன்னரின் ஈமக்கிரியைகள் 05- 05- 1987 அன்று நடைபெற்றது. இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

கணவன் பிள்ளைகள், சகோதரி.

(சி-9001)

திருமதி திரவியம் பிரகாசம்

திருமதி திரவியம் பிரகாசம் காலமாகிவிட்டார். இவர் திரு. ஆசீர்வாதம் பிரகாசம் (அரசாங்க கட்டிட ஒப்பந்தக்காரர்) அவர்களின் அன்பு மனைவியும், திருமதி ரஞ்சிதம், திருமதி ஜெயராணி ஆகியோரின் அருமைத் தாயாரும், திரு ஜெயபாலன் [அரசாங்க கட்டிட ஒப்பந்தக்காரர்), திரு குணநாயகம் ஆகியோரின் அன்பு மாமியாரும், திருமதி செல்லத்துரை திரேஸ், திருமதி அந்தோனிப்பிள்ளை றெஜினு ஆகியோரின் சகோதரியுமாவார். அன்னரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக 9- 05- 1987 (இன்று) சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு புனித. சூசைப்பர் தேவாலயத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: ஜெயபாலன்.

34 ஏ, பீச்ரோட், குருநகர், யாழ்ப்பாணம்.

(சி- 8981)

திருமதி பாக்கியம் தர்மலிங்கம்

நீராவியடி, சிவகுருநாதர் வீதியைச் சேர்ந்த திருமதி பாக்கியம் தர்மலிங்கம் காலமானார். அன்னர் வீரவாகு தர்மலிங்கத்தின் அன்புமனைவியும், திருமதி புவனேஸ்வரி பொன்னுத்துரை, தேவபாலன் (டென்மார்க்) ஆகியோரின் அன்புத்தாயாரும், திரு. நா. பொன்னுத்துரை (நீர்ப்பாசனத் திணைக்களம் ஓட்டுசுட்டான்) அவர்களின் மாமியாரும், ஷர்மிழி (திருக்குடும்ப கன்னியர்மடம்), ஷயந்தினி (யாழ். இந்து/ ஆரம்ப பாடசாலை), சஞ்ஜீபன் ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார். அன்னரின் ஈமக்கிரியைகள் 9-5-87 (இன்று சனிக்கிழமை, அவரின் இல்லத்திலிருந்து காலை 10 மணிக்கு தகனக் கிரியைகளுக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் வீ. தர்மலிங்கம்,

35/8, சிவகுருநாதர் வீதி, யாழ்ப்பாணம் [சி-8986]

மரண அறிவித்தல்

வேலுப்பிள்ளை துரைஐயா

இளைப்பாறிய சுகாதார பரிசோதகரும், கோவளம் காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட வேலுப்பிள்ளை துரைஐயா அவர்கள் 8- 5- 87 ல் காலமாகிவிட்டார். இவர் பாக்கியத்தின் அன்புக் கணவரும், டாக்டர் உருத்திரமூர்த்தி (U K), இரத்தினேஸ்வரமூர்த்தி (பெருந்தெருக்கள் திணைக்களம், அநுராதபுரம் R. D. A.), கலாநிதி விஜயகமூர்த்தி (மருத்துவபீடம் யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் மகேஸ்வரி (U.K.), யோகராணி, சுலோசனா ஆகியோரின் அன்பு மாமனாரும். வே. மாரிமுத்து, காலஞ்சென்ற தம்பையா, சிவகுரு ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார். இவரது ஈமக்கடன்கள் 9- 5- 87 சனிக்கிழமை பிற்பகல் 3-00 மணியளவில் பொயிட்டி நீர்வேலி, (அச்செழு உபதபாற்கந்தோர் முன்) அன்னரது இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

து. இரத்தினேஸ்வரமூர்த்தி,

(9004)